



கரப்பான் பூச்சி 2.0 அரசியலில் பெரும் அதிர்வு அலையை ஏற்படுத்துமா?..

இந்தியாவில் நீட் தேர்வு வினாத்தாள் கசிவுக்கு எதிராக டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி நடத்திய போராட்டம் இளைஞர்களின் எழுச்சியுடன் நாடு முழுவதும் பரவியதால் மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டது. போராட்டக்காரர்களின் அழுத்தம் தாங்க முடியாமல் மத்திய கல்வி மந்திரி ஆக இருந்த தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்தார். மீண்டும் ஜந்தர் மந்தர் டூ பாயிண்ட் ஜீரோ போராட்ட களமாக மாறுமோ என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு ஒட்டுமொத்த நாட்டையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில் ஒரு தகவல் வெளிச்சத்துக்கு வந்தது. தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் கமிஷனராக ஞானேஷ்குமார் பொறுப்பேற்றது முதல் பல்வேறு சர்ச்சைகள் எழுந்து வருகின்றன. தேர்தல் ஆணையத்தால் பீகாரில் தொடங்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருப்பணி தற்போது நாடு முழுவதும் மாநில வாரியாக நடைபெற்று வருகின்றது. இந்தப் பணியில் வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக்கணக்கான பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது வெளிவந்துள்ள தகவலின் படி 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 13 கோடிக்கும் அதிகமான பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணையத்தில் உள்ள மற்ற இரண்டு கமிஷனர்களான சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர்கள் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமாரின் நடவடிக்கைகள் தொடர்பாக 10 மாதங்களில் 14 முறை ஆட்சேபனைகளைப் பதிவு செய்ததாக செய்திகள் வந்துள்ளன. வாக்காளர்களின் பெயர்களை நீக்கும் நடைமுறைகள், புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்கான விதிமுறைகள், தேர்தல் தரவுகளைக் கையாளும் முறை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தகவலை இதுவரை தேர்தல் ஆணையம் முற்றிலும் மறுக்கவில்லை. தேர்தல் கமிஷனர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது இயல்பானது என்றும் தேர்தல் ஆணையம் சட்டப்படியே செயல்படுகிறது என்றும் விளக்கம் அளித்துள்ளது. மேலும் தேர்தல் ஆணையத்தின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்துக்கு கண்டனம் தெரிவித்து நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. இந்தச் சூழலில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியும் களத்தில் இறங்கியுள்ளது.

சிறப்பு தீவிர திருத்தப் பணியின் காரணமாகவே முன்னாள் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், மம்தா பானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் தேர்தலில் தோல்வியடைந்ததாக அந்தக் கட்சி கூறியுள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக கொளத்தூர் தொகுதியில் ஒரு லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது என்றும், சுமார் பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி ஏற்பட்டதாகவும் இதுபோன்ற காரணங்கள் இருப்பதாக அந்தக் கட்சி பட்டியலிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இரண்டு கமிஷனர்கள் தெரிவித்ததாக கூறப்படும் ஆட்சேபனைகளின் அடிப்படையில் இது மிகப்பெரிய முறைகேடு என்று கரப்பான் பூச்சி ஜனதா கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இதற்காக ஞானேஷ்குமார் 48 மணி நேரத்திற்குள் பதவி விலக வேண்டும் என்றும், இல்லையென்றால் மீண்டும் ஜந்தர் மந்தர் உள்பட நாடு முழுவதும் மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது. ஆக ஜந்தர் மந்தர் மீண்டும் ஒரு மிகப் பெரிய போராட்ட களத்துக்கு தயாராகி வருகிறதா என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்



நீதித்துறை வரலாற்றிலேயே முதன்முறையாக 10 வயது சிறுமியின் வேண்டுகோளை தீர்ப்பாக வழங்கிய நீதி தேவதை ரஜினி ராங்கா..

75 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நீதிமன்றம் எத்தனையோ விசித்திரமான வழக்குகளைச் சந்தித்து இருக்கின்றன. எத்தனையோ வித்தியாசமான மனிதர்களையும் கண்டிருக்கின்றன என்று அனல் பறக்கும் வசனத்தை பராசக்தி படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பேசுவார். அந்த நீதிமன்ற காட்சியும், அவர் பேசிய வசனமும் ஒட்டுமொத்த மக்களையும் திரும்பிப் பார்த்து ஆச்சரியப்பட வைத்தது.

அதேபோல் 75 ஆண்டுகளுக்கு பிறகு நிஜத்திலேயே ஒரு நீதிமன்ற காட்சி அரங்கேறி ஒட்டுமொத்த நாட்டையும் அதிர்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது. ஆம் டெல்லி ரோகிணி கூடுதல் செசன்ஸ் நீதிமன்றம் ஹை கோர்ட் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு கோர்ட்டில் மட்டும் அமைதி முழுமையாக நிலவிக்கொண்டு இருந்தது. என்ன தீர்ப்பு வழங்கப் போகிறார் நீதிபதி என்ற எதிர்பார்ப்போடு எல்லோரும் காத்திருந்த நேரம். நீதி தேவதையின் வடிவில் ஆசனத்தில் வந்த அமர்ந்த பெண் நீதிபதி ரஜினி ராங்காவின் முகம் எத்தனையோ உணர்வுகளை வெளிப்படுத்துவது போல் இருந்தது.

தீர்ப்பை வாசித்தவர் மகளே இந்த நீதிமன்றத்தால் உனது இழந்த குழந்தைப் பருவத்தை மீண்டும் திருப்பி தந்து விட முடியாது. ஆனால் உன்னுடைய வார்த்தைகள் கேட்கப்பட்டு உனது கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை இந்த நீதிமன்றம் உனக்கு உறுதியளிக்கின்றது. நீ அங்கிள் என்று அழைத்த அந்த நபர் இனி ஒருபோதும் சுதந்திர மனிதராக வெளியில் வர முடியாது. அவர் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு கூண்டுக்குள்ளேயே வாழ்ந்து அங்கேயே முதுமை அடைந்து இறந்து போவார். இனி உன்னையோ உன் தங்கையையோ அல்லது வேறு எந்த குழந்தையோ அவனால் காயப்படுத்த முடியாது. நீ இந்த நீதிமன்றம் கண்ட மிக தைரியமான பெண் குழந்தை. உனது துணிச்சலை இந்த நீதிமன்றம் எப்போதும் நினைவில் கொள்ளும். இனி கவலை இன்றி பள்ளிக்குச் செல், நண்பர்களை உருவாக்கு, சிரித்து விளையாடி

உன் கனவுகளோடு வாழு மகளே என்று அவர் தீர்ப்பைச் சொல்லி முடித்ததும் நிசப்தமாய் இருந்த அந்த நீதிமன்றத்தில் கூடியிருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் கண்களும் நீதிபதியின் முகத்தை உற்று நோக்கியது. அவரது கண்களில் கோபமும் கருணையும் ஒரு சேர போட்டி போட்டது. குற்றவாளியின் மீது கோபம், பாதிக்கப்பட்ட சிறுமியின் மீது கருணை இப்படிப்பட்ட உணர்வு கொந்தளிப்பில் நீதிபதி காணப்பட்டார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு டெல்லியைச் சேர்ந்த அந்த சிறுமிக்கு அப்போது வயது ஏழு. உலகை தெரிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடியாத வயது. வெகுளித்தனமாக எல்லோரிடமும் அங்கிள் அங்கிள் என பாசமாக பழகினார் அந்த சிறுமி.

அப்படி அங்கிள் என்று அழைக்கப்பட்ட ஒருவர்தான் சுமித் ஷாக்யா அவன் தன் சுய கட்டுப்பாட்டையும் மீறி காமுகன் ஆக மாறி அந்த இளம் தளிரை கசக்கி சீரழித்து இருக்கின்றான். இந்த விவகாரம் டெல்லி புத் விகார் போலீசுக்கு சென்றது. போலீசாரம் போக்சோ சட்டப்பிரிவின் கீழ் வழக்குப் பதிவுச் செய்து சம்பந்தப்பட்ட குற்றவாளியையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். மருத்துவ பரிசோதனைகள், தடவியல் சோதனைகள் என்று பல்வேறு கோணங்களில் சட்டம் அலசி ஆராய்ந்தது. அவை எல்லாமே குற்றவாளிக்கு எதிராகவே அமைந்தது. வழக்கு விசாரணையும் தொடர்ந்தது. டெல்லி செசன்ஸ் கோர்ட்டில் வழக்கை விசாரித்த நீதிபதி ரஜினி ரங்கா வழக்கின் தீவிர தன்மையையும் அரங்கேறிய கொடுமையையும் விலாவாரியாக ஆய்வுச் செய்தார். அப்போதுதான் அந்த சிறுமி நீதிபதி ரஜினி ரங்கா முன்பு ஆஜராகி மிகவும் துணிச்சலுடன் எவ்வித பயமும் இல்லாமல் சாட்சியம் அளித்தது.

நீதிபதியின் புருவங்களை உயரச் செய்தது. தான் அங்கிள் என்று அழைத்த அவர் என்னை சீரழித்து விட்டார். அவருக்கு வயோதிகர் ஆகி சாகும் வரை ஜெயிலில் தண்டனை கொடுக்க வேண்டும் என்று அந்த சிறுமி கிட்டத்தட்ட மழலை மொழியில் தெரிவித்த வார்த்தைகளில் அதன் வலியும், வேதனையும் வெளிப்பட்டது. சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும், நீதியும் நியாயமும் நீதிபதியின் இதயத்துக்குள் ஊடுருவி நிச்சயம் அலை பாய்ந்து இருக்க வேண்டும். அதனால்தான் இந்திய நீதித்துறை வரலாற்றிலேயே முதன் முறையாக ஒரு சிறுமியின் வேண்டுகோளை ஏற்று அவள் வேண்டுகோளின் படியே குற்றவாளி இயற்கையாக முதுமை எழுதி இயற்கையாக மரணத்தை தழுவும் வரை சிறை கூண்டுக்குள்ளேயே அவர் அடைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று தீர்ப்பை வழங்கினார். இந்தத் தீர்ப்பின் மூலமாக அவர் தாயாகவும், நீதி தேவதையாகவும் அந்த சிறுமியின் கண் முன் தோன்றி அவரது இதயத்தில் எழுந்த வார்த்தைகளை கடிதமாக எழுதி அச்சிட்டு அந்த தீர்ப்போடு இணைத்து வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் 506 வது பிரிவின் கீழ் சிறுமியையும் அவரது குடும்பத்தினரையும் கொலை மிரட்டல் வழக்கில் குற்றவியல் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரது குடும்பத்தினரின் மன உளைச்சல் எதிர்கால கல்வி மற்றும் மறுவாழ்வு தேவைகளைக் கருத்தில் கொண்டு இழப்பீடு தொகையாக 10 லட்சத்து 50 ஆயிரத்தை நீதிமன்றம் வழங்கியுள்ளது. டெல்லி வடமேற்கு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைய குழு இந்தத் தொகையை சிறுமியின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும். நீதிபதியின் நெகிழ்ச்சியான கடிதத்தையும், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் முறைப்படி அச்சிட்டு சிறுமிக்கு வழங்கப்பட்டுள்ளன.

10.50 லட்சம் இழப்பீட்டுத் தொகையுடன் சேர்த்து அவரிடம் நேரடியாக ஒப்படைக்க வேண்டும்என்று அதிரடியாகஉத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட குழந்தையின் கண்ணியத்தையும் அவர்களின் எதிர்கால மறு வாழ்வையும் உறுதி செய்யும் ஒரு வரலாற்று சிறப்புமிக்க அணுகுமுறையாக இந்த தீர்ப்பும் நீதிபதியின் கடிதமும் பாராட்டப்பட்டு வருகிறது.

கள்ளம் கபடம் இல்லாத பச்சிளம் குழந்தையை தனது பாலியல் வக்கிர உணர்வுக்கு இறையாக்கி சீரழித்தவனை அதே குழந்தையின் வாய் மொழியையே தண்டனையாக வழங்கிய நீதி தேவதை ரஜினி ரங்கா நீதியை நிலைநாட்டி குற்றவாளிக்கு உரிய தண்டனையை வழங்கி இருக்கின்றார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கிய நீதிபதி ரஜினி ரங்காவிற்கு நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி, விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்..

ரஜினி ரங்காவிற்கு விஜிலென்ஸ் குடும்பத்தின் சார்பில் மிகப்பெரிய ராயல்ஸ் சல்யூட்..

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்





RTI சட்டம் மக்கள் எதிர்ப்பால் பணிந்த தமிழக அரசு..

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு தொடர்பான தகவல்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆர்டிஐ பெறுவதற்கு கட்டுப்பாடுகள் விதித்து தமிழக அரசு வெளியிட்ட புதிய அரசாணை பல்வேறு சர்ச்சைகளை எதிர்கொண்டது.ஆர் டி ஐ சட்டத்தின் அடிப்படை நோக்கமே அரசு நிர்வாகத்தில் வெளிப்படை தன்மையும், துறைகளின் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்காகவும் இருக்க வேண்டும். சட்டம் ஒழுங்கு விஷயத்தில் ஆட்சிக்கு வரும் முன்பு மேடைகளில் பேசிய விஜய் தற்போது முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு கொலை கொள்ளைகளைத் திட்டமிட்டு தடுக்க முடியாது என்று பேசி வருகிறார்.

தமிழகத்தில் சமீப காலமாக அதிகரித்து வரும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் அரசுக்கு பெரிய நெருக்கடியாக மாறி இருக்கிறது. தமிழக முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அரசு மீதான விமர்சனங்களும் அதிகரித்துக் கொண்டு தான் வருகின்றன. இவற்றையெல்லாம் மூடி மறைக்கவே ஆர் டி ஐ செயல்பாடுகளில் சட்டம் ஒழுங்கை விளக்கும் அரசாணையை வெளியிட்டனர். இப்போது எதிர்க்கட்சிகள் மற்றும் பல்வேறு தரப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக அரசு அந்த ஆணையை விளக்கிக் கொண்டு விட்டது.

சமூக வலைத்தளங்களில் அரசு அதிகாரிகளுக்கே தெரியாத பல தகவல்கள் வெளியாகி கொண்டு இருக்கின்றன. அதிலும் சில வழக்குகள் தொடர்பாக காவல்துறையை மிஞ்சும் அளவுக்கு தன்னார்வலர்கள் மற்றும் யூ டியூபர்கள் விசாரணையை மேற்கொள்கின்றனர். முக்கிய வழக்குகளின் விசாரணைத் தொடர்பான தகவல்கள், மனித ஆணையத்தின் குறிப்புகள், சட்டம் ஒழுங்கு தொடர்பான விவரங்களைப் பெற்றுக்கொண்டு பொதுவெளியில் நடத்தப்படும் சித்தரிப்புகள் வழக்கின் விசாரணைக்கே ஊறு விளைவிப்பதாக உள்ளது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழக அரசு காவல்துறை விசாரணைகள் முக்கிய வழக்குகளின் விசாரணைத் தொடர்பான தகவல்களைத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கேட்டு பெறுவதில் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது.

காவல்துறையினரின் துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை அறிக்கைகள் மற்றும் காவல் நிலையங்களில் நிகழும் மரணங்கள், காவல்துறை சித்திரவதை மற்றும் விசாரணை கைதிகளின் மரணம் குறித்து விசாரணை அறிக்கைகளை ஆய்வு செய்தல், மாணவர்கள் அரசியல் கட்சியினர் போன்றவற்றின் போராட்டங்கள், வகுப்பு மற்றும் சாதி மோதல்கள் போன்றவற்றில் சட்டம் ஒழுங்கு குறித்த தகவல்களைப் பெற முடியாது என அரசாணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இத்தகைய ஆணையால் பொதுமக்கள் கடும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும்.

மக்கள் மீது போடப்படும் பொய் வழக்குகள் மூடி மறைக்கப்பட்டால் அதற்கு ஆதரவாக யாருமே போராட முடியாத சூழல் உருவாகும். கம்யூனிஸ்டுகளையும் மாணவர்கள் போராட்டங்கள் குறித்த தகவல்களையும் கணக்கெடுக்க விரும்பிய அரசின் ரகசிய செயல்பாடுகள் குறித்த அறிக்கைகள் வெளியான பின்னரே தமிழக வெற்றிக்கழக அரசின் முகத்தில் கரி பூசப்பட்டது. இதனால் தமிழக காவல்துறை இத்தகைய அரசாணைகள் மூலம் கொலை மற்றும் பாலியல் குற்றங்களைக் கூட எளிதில் மறைத்திட வழி கிடைக்கும். எதிர்க்கட்சிகளின் அதிரடி அறிக்கைகளால் தமிழக வெற்றிக்கழக அரசு ஒரு படி சறுக்க அரசாணையை ரத்து செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது. அரசு இயந்திரங்கள் வெளிப்படை தன்மையோடு இருப்பதே சாமானிய மக்களுக்கும் நீதியைக் கிடைக்கச் செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.A.கிருஷ்ணன்



அரசு நிர்வாகத்தில் கால் நூற்றாண்டைக் கடந்து சாதனைப் படைத்த பிரதமர் நரேந்திர மோடி..

பிரதமர் நரேந்திர மோடியின் அரசியல் பயணம் 60 ஆண்டுகளுக்கும் மேலாக நீண்ட நெடிய பாதையைக் கொண்டது. ஆனால் அவர் அரசு நிர்வாகப் பொறுப்புக்கு வந்து 25 ஆண்டுகள் நிறைவடைய உள்ளது. ஆர் எஸ் எஸ் இயக்கத்தில் சாதாரண தொண்டராகத் தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய அவர் பின்னர் பா. ஜனதா கட்சியிலும் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். கட்சிப் பணிகளில் அவர் காட்டிய தீவிரம் அவரைப் படிப்படியாக உயர்ந்த பொறுப்புகளுக்கு அழைத்துச் சென்றது. இதன் தொடர்ச்சியாக பா. ஜனதாவின் தேசிய பொதுச்செயலாளர் அமைப்பு பொறுப்பையும் அவர் வகித்தார். 2001 ஆம் ஆண்டு குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பம் பெரும் பேரழிவை ஏற்படுத்தியது. அப்போது நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளில் மோடி தன்னை தீவிரமாக அர்ப்பணித்துக் கொண்டார். இதனை உற்று நோக்கிய பா. ஜனதா மேலிடம் அவரை குஜராத் முதல் மந்திரியாக பொறுப்பேற்க அறிவுறுத்தியது.

2001 ஆம் ஆண்டு அக்டோபர் ஏழாம் தேதி தனது 51 வது வயதில் குஜராத் முதல் மந்திரியாக நரேந்திர மோடி பொறுப்பேற்றார். அப்போது தொடங்கிய அரசு நிர்வாகப் பயணம் தொடர்ந்து 25 ஆண்டுகளாக நீடித்து வருகிறார். குஜராத் முதல் மந்திரியாக இருந்தபோது அவரது நிர்வாகப் பணிகள் தேசிய அளவில் கவனம் பெற்றன. தொடர்ந்து பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடி அறிவிக்கப்பட்டார். அந்தத் தேர்தலில் பா. ஜனதா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவர் பிரதமராகப் பதவி ஏற்றார். டிஜிட்டல் இந்தியா இந்தியாவில் தயாரிப்போம். மேக் இன் இந்தியா. அனைவருக்கும் வங்கிக் கணக்கு, சமையல் கேஸ் இணைப்பு, அனைவருக்கும் வீடு, அனைத்து வீடுகளிலும் கழிப்பறை போன்றவை அவருடைய தலைமையில் மத்திய அரசு நடைமுறைப்படுத்திய முக்கிய திட்டங்கள் ஆகும்.

மோடி பிரதமராக தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவி வகித்து வருகிறார். அவரது தலைமையில் பா. ஜனதா சந்தித்த நாடாளுமன்ற தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி வாகை சூடி வருகிறார். அதே நேரத்தில் பா.ஜனதா கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களின் எண்ணிக்கையிலும் காலத்துக்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசு நிர்வாகத்தில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடியின் பயணம் இந்திய அரசியலில் முக்கியமான காலகட்டமாகப் பார்க்கப்படுகிறது. வருகிற அக்டோபர் ஏழாம் தேதி அவர் அரசு நிர்வாகப் பொறுப்பில் 25 ஆண்டுகள் என்ற மயில் கல்லை எட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

குஜராத் முதல் மந்திரியாக தொடங்கிய அவரது நிர்வாகப் பயணம் இந்திய பிரதமர் என்ற உயர்ந்த பொறுப்பில் தொடர்கிறது. நாட்டின் உள்நாட்டு வளர்ச்சித் திட்டங்கள் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் இந்தியாவின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் முக்கிய பொறுப்பை மோடி அலங்கரித்து வருகிறார். இந்தியாவை டிஜிட்டல் மயமாக்கும் முயற்சிகள், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்கள், அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் என பல்வேறு துறைகளில் கடந்த ஆண்டுகளில் வியக்கத்தகு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றால் அது மிகையே அல்ல.

அரசு நிர்வாகத்தில் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் இந்த நேரத்தில் கடந்த காலத்தை திரும்பிப் பார்ப்பதும், இதுவரை செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதும், எதிர்காலத்தில் நாட்டுக்குத் தேவையான திட்டங்களை வகுப்பதும் முக்கியமாகிறது. நரேந்திர மோடியின் நிர்வாக பயணத்தின் அடுத்த கட்டத்தில் மக்களின் எதிர்பார்ப்புகள் மேலும் அதிகரித்துள்ளன. அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ப நாட்டின் வளர்ச்சியையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது. அரசு நிர்வாகத்தில் கால் நூற்றாண்டை கடந்து சாதனை படைத்த பிரதமர் நரேந்திர மோடிக்கு நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். தொடரட்டும் உங்களுடைய அரசியல் பாதை பயணம்..



சிறப்பு ஆசிரியர் கோபி குமார்

வீடு மற்றும் கோயில்களில் மட்டும் திருமேனிகளை வைத்து கொண்டாடப்பட்டு வந்த விநாயகர் சதுர்த்தி எழுச்சி விழா

எப்படி, யாரால், எதற்காக பொது விழாவாக வீதிக்கு வந்தது..

தமிழகம் முழுவதும் விநாயகர் சதுர்த்தி எழுச்சி திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழாவானது உலகம் முழுவதும் உள்ள இந்துக்கள் மிகச் சிறப்பாக கொண்டாடி வருகிறார்கள். விநாயகர் சதுர்த்தி என்பது தமிழ் ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி அன்று கொண்டாடப்படும் விநாயகப் பெருமானின் பிறந்த நாளாகும். மராட்டிய மன்னர் வீரசிவாஜி காலத்தில் மக்கள் மத்தியில் தேசப்பற்று மற்றும் ஒற்றுமையை வளர்க்க இந்த பண்டிகை பொது விழாவாக மாற்றப்பட்டது. பிறகு பிரிட்டிஷ் ஆட்சியின் போது மக்கள் ஒன்று கூடுவதை தடை செய்ததை எதிர்த்து 1893 லோக மான்யா திலகர் பொது இடங்களில் விநாயகர் மாதிரி களிமண் திருமேனிகளை வைத்து வழிபாட்டை பிரபலப்படுத்தினார். இந்த திருவிழாவிற்கு தயாராகும் வகையில் கை வினைஞர்கள் விற்பனைக்காக விநாயகரின் களிமண் மாதிரிகளை உருவாக்குகின்றனர். அரை அடி முதல் 15, 20 அடிகள் வரை விநாயகரின் மாதிரி திருமேனிகள் உருவாக்கி வருகின்றனர். இந்த திருமேனிகளை வீட்டிலோ, பொது இடங்களிலோ வைத்து பிரதிஷ்டை செய்து 3,5,7, 11 நாட்கள் பூக்கள் மற்றும் பிற வண்ணமயமான பொருட்களால் அலங்கரித்து பூஜைகள் செய்து பிறகு ஒரு குறிப்பிட்ட நாட்களில் ஊர் பொதுமக்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து ஊர்வலமாக சென்று சுத்தமான ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளில் விஜர்சனம் செய்யப்படுகின்றது. சதுர்த்தி அன்று பூ உலகிற்கு வரும் விநாயகர் பெருமான் சிலைகளை மூழ்கடித்த பிறகு தனது தேவலோகத்திற்கு திரும்புகிறார். விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டம் பிறப்பு வாழ்க்கை மற்றும் இறப்பு சுழற்சியின்



முக்கியத்துவத்தையும் குறிக்கிறது.

விநாயகர் திருமேனிகளை மூழ்கடிப்பதற்காக வீட்டில் இருந்து வெளியே எடுக்கும் போது அது நம் வீட்டின் தடைகளையும் தன்னுடன் எடுத்துச் செல்கிறது. இந்த விழாவை அனைத்து இந்து மக்களும் ஒவ்வொரு ஆண்டும் எதிர்பார்த்து காத்திருப்பார்கள். இப்படிப்பட்ட இந்த திருவிழாவானது வட மாவட்டங்களில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் இது ஒரு சிறப்பு வாய்ந்த விழாவாக இல்லாமல் இருந்தது. எந்த ஒரு ஆட்சியாளரும் இந்த விழாவை அங்கீகரிக்கவில்லை. வாழ்த்துக்கள் சொல்லவில்லை.

பிறகு தமிழ்நாட்டில் வீட்டிற்குள் மட்டுமே இருந்த விநாயகர் எப்படி பொதுவெளியில் வந்தார். மகாராஷ்டிராவில் பால கங்காதர திலகர் விடுதலைப் போராட்டத்திற்காக விநாயகர் சதுர்த்தியை பொதுவிழாவாக மாற்றியதைப் போல தமிழ்நாட்டிலும் ஆன்மீகம் மற்றும் சமூக ஒற்றுமையை உருவாக்க இந்து முன்னணியின் நிறுவனர் வீரத்துறவி ராமகோபாலன் ஜி வித்திட்டார். அதுவரை வீடுகளிலும் கோயில்களிலும் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த விநாயகர் சதுர்த்தியை,1983 ஆம் ஆண்டு சென்னை திருவல்லிக்கேணியில் முதன் முதலாக பொது வீதிகளில் பந்தல் அமைத்து பெரிய சிலைகளை நிறுவி வழிபடச் செய்தார். வழிபாட்டிற்கு பிறகு சிலைகளை ஒன்றாகத் திரட்டி ஊர்வலமாக கொண்டுச் சென்று கடலில் அல்லது நீர் நிலைகளில் கரைக்கும் வழக்கத்தை தமிழ்நாட்டில் முறைப்படுத்தி பிரபலமாக்கினார். ஜாதி பாகுபாடுகளைக் கடந்து இந்துக்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டும் என்ற நோக்கில் இந்த விழாவை ஒரு சமூக எழுச்சி விழாவாக அவர் வடிவமைத்தார்.

தொடக்க காலங்களில் பல்வேறு அரசியல்

மற்றும் நிர்வாக எதிர்ப்புகள் தடைகள் வந்த போதிலும் சட்டப் போராட்டங்கள் மற்றும் தொண்டர்களின் ஆதரவோடு ஆண்டுதோறும் இந்த ஊர்வலங்களை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார். இன்று தமிழ்நாட்டில் மூளை முடுக்கெல்லாம் பல்லாயிரக்கணக்கான சிலைகள் வீதிகளில் வைக்கப்பட்டு ஊர்வலமாக கொண்டு செல்லப்படுகிறது. ஆம் ஜாதி இல்லாத இந்து ஒற்றுமை, இந்துக்கள் ஒன்றுபட வேண்டும், இந்து மதம் காக்கப்பட வேண்டும், நமது கோயில்கள் காக்கப்பட வேண்டும், நம் சனாதன தர்மம் காக்கப்பட வேண்டும், தமிழர்கள் என்றுமே இந்துக்கள் தான் என்பதை உணர வேண்டும், தமிழர்களின் பண்பாடுகள் காக்கப்பட வேண்டும், நமது தேசத்தின் மீது பற்று வேண்டும் இதற்காக இளைஞர்களும், பெண்களும் பொது வெளியில் வர வேண்டும் என்ற எண்ணங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அதற்கு சாட்சி கோபிசெட்டிபாளையத்தில் நடந்த விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் 2007 பெண்கள் கலந்துகொண்டு தலையில் கரகம் எடுத்து, முளைப்பாரி எடுத்து, காவி கொடியை பிடித்து, விநாயகர் திருமேனிகளைக் கையில் ஏந்தி ஒரு கோயில் திருவிழாவாக ஊர்வலம் சென்றது மிகச் சிறப்பு. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வும், 10,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட தாளவாடி விநாயகர் சதுர்த்தி ஊர்வலம், மிகச் சிறப்பாகவும் கோலாகலமாகவும் நடைபெற்ற கவுந்தப்பாடி ஊர்வலம், மாவட்ட நிர்வாகமே கவனம் செலுத்தும் சத்தியமங்கலம் ஊர்வலம் இதற்கு சாட்சி.

இந்த அற்புதமான தருணங்களை நேரில் பார்க்க வீரத் துறவி ராமகோபாலன் ஜி இந்த உலகில் இல்லை என்றாலும், அவரின் ஆன்மா மக்களை ஆசிர்வதித்துக் கொண்டிருக்கிறது. இந்த எழுச்சி திருவிழாவை கண்டுகொள்ளாத ஆண்ட அரசியல் கட்சிகள், இன்று வாழ்த்துக்கள் சொல்வதையும் காணமுடிகிறது. இதற்கு மேல் ஒரு படியாக ஆளும் கட்சி வாழ்த்துக்கள் சொல்லியும், தமிழகம் முழுவதும் கட்டவுட்டுகள், வைத்து தமிழக மக்களுக்கு வாழ்த்து சொல்லி இருப்பது புதிய ஆரம்பம். வீரத்துறவி ராமகோபாலன் ஜி கனவுகள் மெய்ப்பட வேண்டும், இந்து ஒற்றுமை ஏற்பட வேண்டும், ஜாதிகள் கடந்து இந்துக்கள் ஒன்றுபட வேண்டும், அடுத்த தலைமுறைக்கு நமது பண்பாடுகளும் கலாச்சாரமும் கொண்டு சேர்க்க வேண்டும், இதற்கு உறுதுணையாக களத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்து முன்னணி அமைப்பிற்கும், பொறுப்பாளர்களுக்கும், இந்து இயக்கங்களுக்கும் நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் சார்பாக வாழ்த்துக்களைச் சொல்லிக் கொள்கிறோம்.



சிறப்பு ஆசிரியர் நீலகிரி சிவகிருஷ்ணா



சிறப்பு சமரச தீர்வு முகாம்

பேரணியைத் தொடங்கி வைத்த நீதிபதி அமிர்தா..

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை சமரசத்தின் மூலம் தீர்வுகாண உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவின் படி 01.10.2026 முதல் 31.12.2026 வரை சிறப்பு சமரசத்தீர்வு முகாம் நடைபெறுகிறது.

இந்த சிறப்பு சமரசத்தீர்வு முகாமில், குடும்ப பிரச்சனை வழக்குகள், வாகன விபத்து இழப்பீடு வழக்குகள், குடும்ப வன்முறை வழக்குகள், காசோலை மோசடி வழக்குகள், வர்த்தக பிரச்சனை வழக்குகள், சமரசத்திற்குட்பட்ட குற்றவியல் வழக்குகள், பாகப்பிரிவினை வழக்குகள், வாடகை தகராறு வழக்குகள், நில ஆர்ஜித வழக்குகள், இதர உரிமையியல் வழக்குகள் மற்றும் தொழிலாளர் நல வழக்குகள் உட்பட, பல்வேறு வழக்குகள் தீர்வு காணப்பட உள்ளது.

மாவட்ட சமரச மையம் உதகமண்டலம், துணை சமரச மையங்கள் குன்னூர், கோத்தகிரி, கூடலூர் மற்றும் பந்தலூர் ஆகிய 5 தாலுகாக்களிலும் உள்ள நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. இதில் நிலுவையில் உள்ள வழக்குகளை நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ சமரச மையத்திற்கு அனுப்பக் கோரலாம். அனைத்து மையங்களிலும் உள்ள பயிற்சி பெற்ற சமரசர்கள், சமரச பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக வழிநடத்துவர். சமரசர் முன்னிலையில் வழக்காடிகள் எதிர்தரப்பினருடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தலாம். வழக்காடிகள் தங்களது வழக்கறிஞருடன் பங்கு பெறலாம். சமரசம் ஏற்படவில்லை என்றால் வழக்கை நீதிமன்றத்தில் தொடரலாம். வழக்குகளுக்கு சமரச மையத்தில் சுமூகமான தீர்வு காணப்பட்டால் முழு நீதிமன்ற கட்டணத்தையும் திரும்பப் பெறலாம் எனக் கூறப்படுகிறது.

வழக்காடிகள் சமரச மையத்தில் நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவே ஆஜராகி, தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனவும், பொதுமக்கள் மற்றும் வழக்காடிகள் இச்சிறப்பு சமரச தீர்வு முகாமைப் பயன்படுத்தி, நிலுவையில் உள்ள தங்களது வழக்குகளை, சமரச தீர்வு மையத்தின் மூலம் முடித்துக் கொள்ளலாம் என கூறப்படுகிறது.

கோத்தகிரியில் சமரச தீர்வு முகாம் குறித்த விழிப்புணர்வு பேரணி : மாவட்ட சமரச மையம், நீலகிரி மாவட்டம்.

நீலகிரி மாவட்ட சிறப்பு சமரசத்தீர்வு முகாம்: 01.10.2026 To 31.12.2026.

தமிழ்நாடு சமரச தீர்வு மையம், தேசிய சட்டப் பணிகள் ஆணை குழு வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்ட சமரச தீர்வு மையம் மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், சமரச தீர்வு முகாம் அக்டோபர் 1ஆம் தேதி முதல், டிசம்பர் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது எனக் கூறப்படுகிறது. இந்த முகாம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கோத்தகிரி சட்டப்பணிகள் குழு சார்பில், விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

கோத்தகிரியில் உள்ள மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றத்தில் இருந்து



புறப்பட்ட பேரணியை, நீதிபதி அமிர்தா தொடங்கி வைத்தார். பேரணியாகச் சென்றவர்கள், சமரச தீர்வு மையத்தின் கீழ் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை நேரடியாகவோ அல்லது வக்கீல்கள் மூலமாகவோ சமரச மையத்தில் அளித்து பயன்பெறலாம் என்பது குறித்து பொதுமக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற பேரணி, மீண்டும் நீதிமன்றத்தைச் சென்றடைந்தது. பேரணியில் வக்கீல்கள், நீதிமன்ற ஊழியர்கள், காவல்துறையினர் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் பலர் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் மற்றும் வழக்காடிகள் இச்சிறப்பு சமரச தீர்வு முகாமை பயன்படுத்தி, நிலுவையில் உள்ள தங்களது வழக்குகளை, சமரச தீர்வு மையத்தின் மூலம் முடித்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. பல காலமாக, பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காமல் அவதிப்படும் பொதுமக்களுக்கு இது போன்ற முகாம்கள் பெரும் உதவியாக இருக்கும் என பொதுமக்கள் மத்தியில் பேசப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க இது போன்ற முகாம்களை உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றம் ஏற்பாடு செய்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது எனவும் பொதுமக்கள் மத்தியில் கூறப்படுகிறது.

மேலும் இந்த முகாம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை கோத்தகிரியில் ஏற்பாடு செய்த, நீதிபதி அமிர்தாவிற்கும்,கோத்தகிரி சட்டப்பணிகள் ஆணைக் குழுவிற்கும் பொதுமக்கள் தங்களது நன்றியைத் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது
அரசியல் மற்றும் புலனாய்வு மாத இதழ்
விஜிலென்ஸ்
RNI No. TNTAM / 2012 / 46424 ஆஞ்சுவது யாதொன்றும் இலேலை ஆளுடலனைத் தவிர
INDIA'S FIRST ISO 9001 : 2015 CERTIFIED MAGAZINE
INDIA'S TRADE MARK CERTIFIED MAGAZINE
நமது 15 | விஜிலென்ஸ் 03 | அக்டோபர்-2026 | விலை:ரூ.20/-
Namathu : 15|Vijilence:03 | October:2026 | Price:20/-

நிறுவனர்/வெளியீட்டாளர்/ஆசிரியர்
திரு.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.D. ஆனந்தன் துரைராஜ்
M.A.,M.A.,Ph.D.,Dip.Agri.,HDSE.,HCC.,

இணை ஆசிரியர்கள்
திருமதி.HE.AMB. சேவா ரத்னா விஜிலென்ஸ். DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்
B.SC.,M.A.,M.Phil.,DTP.,PGDCA.,
விஜிலென்ஸ் DR.A. கிருஷ்ணன்

நிர்வாக ஆசிரியர் :
திருமதி.E. தமிழ் சுமதி இளங்கோவன்., சென்னை

செய்தி ஆசிரியர் : M.செளந்தர பாண்டியன்.,

உதவி ஆசிரியர்கள் :
M.சண்முக பாண்டியன், Dr.M.G. ஜானகிராமன், பாண்டிச்சேரி அக்பர் அலி, வடிவேல், ராஜாசிங், கராத்தே கார்த்தி

சிறப்பு ஆசிரியர்கள் :
E.திருவிக்ரம், நசீர், பெரியசாமி சிவக்குமார், சாகுல் குமார், ஊட்டி சிவகிருஷ்ணா, பிர்லா போஸ், எஸ் என் ஆர், செந்தில்குமார், நரேஷ் ஈஸ்வர், மகேந்திரன், அரவிந்த் மோதிலால் காதரே, பிரகாஷ் ராஜன்

கௌரவ ஆசிரியர்கள் :
கல்வித் தந்தை DR.S.ராமமூர்த்தி, D.தனபால் (Ex. உள்துறை அரசு துணைச் செயலாளர், தலைமைச் செயலகம்,) வேலன் (கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஓய்வு.)
சேலம் R.R. பிரியாணி தமிழ்ச்செல்வன்

தலைமை நிருபர்கள் :
பூமாரி, அழகேசன், காமராஜ், Karnataka KGF Anbarasan, Manikandan, Kamala Kannan, கேரளா சசிகுமார், புதுதில்லி விவேகானந்தா, அடால்ஃப் எட்வின், சையத் இப்ராஹிம்

நிருபர்கள் :
செளந்தர், வினோத், வெங்கடேசன், ரகு, தினேஷ்குமார், சிவக்குமார், பாலமுருகன், ராஜா, சவுதி அரேபியா Paul Asriprince Philemon, பாஸ்கர், வசந்தகுமார், வெங்கடகிருஷ்ணன், வினோத் குமார், முருகேசன், செல்வம், பழனிச்சாமி, முஜிபூர் ரஹமான், தமிழரசன், பரந்தாமன், அல்போன்ஸ் ஜான் கென்னத், இப்ராஹிம்

ஒளிப்பட நிருபர் : சண்முக பாண்டியன், பாபு.

சட்ட ஆலோசகர்கள் :
திருச்சி M.சிவக்குமார்.,M.A.,B.L.,DCA.,DLL&AL., மதுரை கிளை உயர்நீதிமன்றம்
நாமக்கல் S.அன்பரசன்.,B.A.,B.L., சென்னை உயர்நீதிமன்றம்
G.ராதாகிருஷ்ணன்.,M.B.A.,B.L., மதுரை கிளை உயர் நீதிமன்றம்
DR.A.செல்வகுமார்.,MCA.,M.Sc.,(IT)B.L.,சென்னை உயர்நீதிமன்றம்
T.பிரபு அரசு.,B.Tech.,L.L.B.,சென்னை உயர்நீதிமன்றம்
K.அரவிந்தன்.,B.A.,B.L.,சென்னை உயர்நீதிமன்றம்

ஆசிரியரின் முகவரி : 78/25, பருசல் துறை ரோடு, முசிறி 621 211, திருச்சி மாவட்டம்.
நிர்வாக அலுவலகம் : 3/34A, சாரதி நகர் முதல் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை 600 056
கிளை அலுவலகங்கள் :
புதுதில்லி, பாண்டிச்சேரி, கர்நாடகா, கேரளா
Cell : 89734 15000
Email : namathuvijilence@gmail.com
Website : vijilencenetwork.com

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நமது விஜிலென்ஸ் நிர்வாகம் பொறுப்பல்ல. இதழில் வெளியாகும் செய்திகளின் உண்மைத் தன்மைக்கு அந்தந்த செய்தியாளர்களே பொறுப்பு.







தாய்மாமன் தங்க மோதிரத்தை வரவேற்கும் பெண்கள்..

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தைத் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தொடங்கி வைத்தார். மதுரையில் இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதற்கு சிறப்பு ஒன்று உள்ளது. தென் மாவட்டங்களில் குறிப்பாக மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தாய்மாமன் உறவும், தாய்மாமன் சீரும் மக்களின் வாழ்வோடு கலந்தவை என்பதனாலேயே இங்கு இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பழந்தமிழ் இலக்கியங்களில் தாய்மாமன் என்ற சொல் அம்மான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தாயைக் குறிக்கும் அம்மா என்ற சொல்லின் ஆண் வடிவமாகக் கருதப்படுகிறது. காப்பிய காலத்திலும் கூட தாய்மாமன் குடும்பத்தின் அச்சாணியாகத் திகழ்ந்துள்ளார் என்பது நிதர்சனமான உண்மை. மகாபாரதத்தில் கௌரவர் பக்கம் இருந்த சகுனியும், பாண்டவர்கள் பக்கம் இருந்த கண்ணனும் தாய்மாமன்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் இலக்கியங்களிலும் சரி தாய் மாமனை வெறும் உறவாகப் பார்க்காமல் தாயின் அன்பையும், தந்தையின் கடமையையும் ஒருசேர வழங்கும் பொறுப்பாகவே போற்றப்படுகிறது என்றால் அது மிகையே அல்ல. அதோடு மட்டுமல்லாமல் தாய்க்கு நிகரான உறவு ஒன்று உண்டு என்றால் அது தாய் மாமன் மட்டும்தான். அத்தகைய உன்னத உறவை தான் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் அனைவருக்கும் முதலமைச்சர் தாய்மாமன் தங்க மோதிரத்தினை வழங்கியுள்ளார்.

2025 ஆம் ஆண்டிலேயே மதுரை மாநாட்டில் பேசும்போது தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த ஸ்னோலினுடைய அம்மா என்னைத் தம்பி என்றும் அவங்க பொண்ணுக்கு தாய் மாமன் என்றும் முதல்வர் விஜய் சொன்னார். அதோடு மட்டுமல்லாமல் அந்த அம்மாவுக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டில் உள்ள எல்லா சகோதரிகளுடைய குழந்தைகளுக்கும் நான் தாய்மாமன் ஆக தான் இருப்பேன் என்று பிரகடனப்படுத்தினார்.

கரூரில் நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் விஜய் பேசும்போது நான் ரீல் மாமா இல்லை ரியல் தாய் மாமன் என கூறினார். தமிழக வெற்றி கழகத்தின் தேர்தல் அறிக்கைகளிலும் தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ஒரு தங்க மோதிரம் வழங்கப்படும் என அறிவித்தார்.

தேர்தல்களில் வெற்றி பெற்ற பிறகு ஜூன் 22 ஆம் தேதி அதாவது முதல்வர் விஜயின் பிறந்த நாளிலிருந்து அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். சொன்னபடி மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் மும்மதங்களைச் சேர்ந்த தாய்மார்களுக்கு ப் பிறந்த குழந்தைகளுக்கு முதலாவதாகவும், அதனைத் தொடர்ந்து மேலும் 24 குழந்தைகளுக்கும் அவரே மோதிரம் அணிவித்து விட்டு பிரசவவார்டில் இருக்கும் மற்ற தாய்மார்களின் குழந்தைகளுக்கும் மோதிரம் வழங்கினார். தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 7.8 லட்சம் பிரசவங்கள் நடைபெறுகின்றன. இதில் 4.2 லட்சம் அதாவது 53 சதவீத பிரசவங்கள் தான் அரசு மருத்துவமனைகளில் நடக்கின்றன. இங்கு பிறக்கும் நாலு புள்ளி இரண்டு லட்சம் குழந்தைகளுக்கும் முதலமைச்சர் தான் தாய்மாமன் என்ற வகையில் மருத்துவமனையை விட்டு வீட்டுக்குச் செல்லும் போது தமிழக அரசு தாய்மாமன் சீராகக் கொடுத்த தங்க மோதிரம் பிஞ்சு விரலில் மின்னும் விசில் ரேகையைத் தொட்டு உறவாடிக் கொண்டே இருக்கும்.

தாய்மாமன் தங்க மோதிரம் பச்சிளம் குழந்தைகளுக்கு கிடைத்த வரப்பிரசாதம். தமிழகத்தில் இந்த மோதிரங்களை பெற்ற தாய்மார்கள் எங்களுக்கு ஒரு அண்ணன் கிடைத்தார். எங்கள் குழந்தைக்கு தாய் மாமன் கிடைத்தார் என்று மகிழ்ச்சி பொங்க சொல்லி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயத்தில் தனியார் மருத்துவமனைக்கு நிகராக அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்தினால் தனியார் மருத்துவமனைக்கு செல்லும் பிரசவங்களும் இனி அரசு மருத்துவமனையிலேயே நடக்கும். அரசு மருத்துவமனையில் 53 சதவீதம் பிரசவம் நடக்கிறது. இனி 100 சதவீதமாக இருக்க வேண்டும். அரசு மருத்துவமனையில் தரமான மருத்துவ சிகிச்சை, மருத்துவர்கள், செவிலியர்கள், உபகரணங்கள் என அனைத்தும் சரிவர கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே நல்ல உறவை ஏற்படுத்தி இருக்கிறது. இத்திட்டமானது பெண்கள் மத்தியில் வரவேற்கத்தக்கத் திட்டமாக இருக்கிறது என்றால் அது மிகையே அல்ல என்பது தான் நிதர்சனமான உண்மை.







மின் வெட்டும் தமிழக மக்களும்..

தமிழகத்தில் தமிழக வெற்றி கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு மின்வெட்டு பிரச்சனை பெரிய அளவில் தலைதூக்கி உள்ளது. நகர் மற்றும் கிராமப்புற பகுதிகளில் பகலில் மட்டுமன்றி நள்ளிரவிலும் மின்வினியோகம் பெருமளவில் தடைபடுகிறது. இதனால் தலைநகர் சென்னை, மதுரை, கோவை, சேலம், திண்டுக்கல், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பகல் மற்றும் நள்ளிரவு நேரங்களில் மக்கள் மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழக வெற்றிக் கழக அமைச்சர்கள், எம் எல் ஏக்களை முற்றுகையிட்டு சரமாரியாக கேள்விகள் கேட்கின்றனர். ஆனால் மின் வெட்டு தொடர்பாக இதுவரை தமிழக வெற்றிக்கழக அரசு தரப்பில் தெளிவான விளக்கம் தற்போது வரை அளிக்கப்படவில்லை. மின்துறை அமைச்சரான நிர்மல் குமார் காற்றாலையில் எதிர்பார்த்த மின்சாரம் வரவில்லை. ஆங்காங்கே சாலை உள்ளிட்ட சீரமைப்பு பணிகளால் மின்தடை ஏற்படுகிறது என போகிற போக்கில் சொல்லிவிட்டு கிளம்பி போய் விட்டார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா காற்று நின்று போச்சு என்று கூறி மிரள வைத்துள்ளார். ஒரு மாநிலத்தில் தொழிற்சாலை அமைக்க எண்ணும் ஒரு நிறுவனம் முதலில் அம்மாநில அரசை கேட்டுக் கொள்வது தடையில்லா மின்சாரம் தான். இன்று வரை தமிழகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 250க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. இவைகள் தொடர்ந்து இயங்குவதற்கு கட்டாயம் தடையின்றி மின்சாரம் வழங்கப்பட வேண்டும். இதெல்லாம் ஒப்பந்தத்திலேயே குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஒரு மாநிலத்தின் தலைநகர் மற்றும் தொழில் நகரங்களில் தடையின்றி மின்சாரம் வழங்கப்படுவதை அரசு கட்டாயம் உறுதி செய்ய வேண்டும். ஒருவேளை மின்வினியோகம் தடைப்படும் சூழல் ஏற்பட்டால் மாற்று வழியை யோசித்து சீரான மின் விநியோகத்தை வழங்க வேண்டும். தமிழக அரசு அதைப்பற்றி எல்லாம் யோசிக்கவே இல்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

எல் நினோ தாக்கத்தால் வெப்பத்தின் கால அளவு நீட்டிக்கப்பட்டிருக்கும் சூழலில் மின்வினியோகத்தை கூடுதலாக வேண்டும் என்று திட்டமிட்டதாகவும் தெரியவில்லை. தமிழகத்தில் தொழில் மாவட்டங்களில் ஒன்றான கோவை மாவட்டத்திலும் மின்வெட்டு பிரச்சனை பாடாய் படுத்துகிறது.

இங்குள்ள சிறு குறு தொழிற்சாலைகள் மின் வெட்டால் கடுமையாக பாதிக்கப்பட்டன. இம்மாவட்டத்தில் மட்டும் 50,000 சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளன. அறிவிக்கப்படாத பல மணி நேரம் மின் வெட்டால் தொழில் உற்பத்தி இங்கு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் நிலவும் மின் வெட்டால் சுமார் 50 கோடிக்கு மேல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் நமக்கெல்லாம் பெரும் அதிர்ச்சி அளிக்கின்றன. தொழில் முதலீடு என்ற பெயரில் லண்டன் சென்று வந்துள்ள தமிழக முதல்வர் விரைவில் மீண்டும் பல வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செல்ல உள்ளதாக அரசு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அதற்கு முன்பு மாநிலத்தில் நிலவி வரும் மின்வெட்டை சமாளிப்பதற்கான வழிமுறைகளை ஆராய வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது. தமிழக மக்களை மின்வெட்டில் இருந்து காப்பாற்ற உடனடியாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே நமது அனைவரின் கோரிக்கையாகும். நமது கோரிக்கைக்கு தமிழக அரசு செவி சாய்த்து தகுந்த நடவடிக்கை எடுக்குமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

கஞ்சாவை கட்டுப்பாட்டில் கொண்டு வந்த கும்மிடிப்பூண்டி ஆய்வாளர் K.V.பால முருகன்.



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம்,கும்மிடிப்பூண்டி சரக காவல் ஆய்வாளராகப் பணியாற்றி வருபவர்K. V.பாலமுருகன் B. Sc.,.

கடலூர் மாவட்டத்தில் உள்ள டவுனில் பிறந்த இவர் இளங்கலை பட்டப்படிப்பு முடித்துள்ளார். இவரது தகப்பனார் வெங்கடேசன் ஆவார். அவர் மாவட்ட ஆட்சியரின் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

கடந்த 2008 ல் உதவி ஆய்வாளர் தேர்வில் வெற்றி பெற்று திருத்தணி பகுதியில் உதவி ஆய்வாளராக மதன்முதலில் பணியில் சேர்ந்துள்ளார். அதன்பிறகு கடலூர், விழுப்புரம் ஆகிய இடங்களிலும் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி தன் சீர்மிகு ஆற்றலால் உதவி ஆய்வாளர் பதவியிலிருந்து ஆய்வாளராகப் பதவிஉயர்வு பெற்ற பிறகு காஞ் சிபுரம் மற்றும் செங்கல்பட்டு பகுதிகளில் சிறப்பாகப் பணியாறியுள்ளார். பிறகு தற்போது கும்மிடிப்பூண்டி காவல் ஆய்வாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த கும்மிடிப்பூண்டி பகுதியானது ஆந்திரா பார்டரை ஒட்டியுள்ளது. தமிழ்நாடு மற்றும் ஆந்திர எல்லைப் பகுதியாக இந்த கும்மிடிப்பூண்டி பகுதி உள்ளதால் இங்கு போதைப்பொருள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இந்த எல்லைப்பகுதியில் அடிக்கடி ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு போதைப்பொருள் கடத்தப்பட்டு தமிழகம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்நிலையில் கும்மிடிப்பூண்டி ஆய்வாளராக K. V. பாலமுருகன் பொறுப்பேற்றதிலிருந்து இந்தப் பகுதியில் போதைப் பொருள் நடமாட்டம் கட்டுக்குள் வந்துள்ளது என்பது மிகவும் பாராட்டுதலுக்குரியது என பொதுமக்கள் கூறுகின்றனர்.

மேலும் இவர், பொதுமக்கள் யாராவது எந்தெந்த பகுதியில் போதைப்பொருள் நடமாட்டம் இருக்கிறது என்று தனக்கு தகவல் அளிக்கும் நபரின் பெயர்களை ரகசியமாக வைத்துக்கொண்டு அந்தப் பகுதியில் சென்று போதைப்பொருள் விற்பவரையும், அதைப் பயன்படுத்துபவர்களையும் பிடித்து நடவடிக்கை எடுத்து வருகிறார். இவர் இந்த கும்மிடிப்பூண்டி காவல் ஆய்வாளராகப் பொறுப்பேற்றதிலிருந்து சுமார் 30 கஞ்சா வழக்குகள் பதிந்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதேபோல் இவர் காவல் துறை பணியில் சேர்ந்து சுமார் 18 ஆண்டுகள் ஆகின்றது. தனது மேலதிகாரிகளிடமும் இதுவரை நல்ல பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். பொதுமக்களிடமும் நல்ல நண்பர் போல பழகும் விதமும் இவரின் குணாதிசயமும் பாராட்டுதலுக்குரியது. மேலும் தன் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றும் காவல்துறை அலுவலர்களையும், கண்டிப்புடனும் கண்ணியத்துடனும் வழிநடத்தும் இந்த கும்மிடிப்பூண்டி காவல் ஆய்வாளர் K. V. பாலமுருகனின் பணி சிறக்க வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் நமது விஜிலென்ஸ் குழுமம் தெரிவித்துக் கொள்கிறது.

கள்ளக்குறிச்சி மாவட்ட நிருபர் வெங்கடேசன்

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் அதிகாரிகள் மடைமாற்றும் செயலால் சூழும் கழிவுநீர் சதுப்பு நிலங்களாக மாறிய விளை நிலங்கள்..



திருக்கோவிலூர் நகரில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில வருடங்களாக கழிவுநீர் வாய்க்கால்கள் பராமரிக்க படாததாலும், கழிவு நீர் அனைத்தும் சாலைகளிலும், விளை நிலங்களிலும் செல்வதால் கொசு உற்பத்தியாகி அதன் மூலம் பொதுமக்கள் பல்வேறு விஷக்காய்ச்சலுக்கு ஆளாகி வருகின்றனர். அதோடு நன்கு சாகுபடி செய்யக்கூடிய விளை நிலங்கள் சதுப்பு நிலங்களாக மாறிவருகிறது. பொது மக்களும் விவசாயிகளும் கழிவு நீர் வாய்க்காலை தூர்வாரி செப்பணிடவும், பாசன வாய்க்கால்களைத் தூர்வாரி செப்பணிடவும் நகராட்சி அதிகாரிகளிடம் கோரிக்கை மனு அளித்தால், நகராட்சி ஆணையாளரோ வடிகால்கள் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடம் என்றும் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான இடம் என்றும் தங்கள் நிர்வாகத்தால் சீர் செய்ய முடியாது என எழுத்து பூர்வமாகவும், நேரடியாகவும் தெரிவிக்கின்றனர்.

பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ் சாலைத்துறையிடம் பொதுமக்கள், விவசாயிகள் கழிவு நீர் வாய்க்கால் மற்றும் பாசன வாய்கல்களைச் சீர் செய்ய கேட்டால் அவர்களோ இதனை சீரமைக்கும் பொறுப்பு நகராட்சி நிர்வாகத்திடம் உள்ளது என திட்டவட்டமாகவும் எழுத்துப்பூர்வமாகவும் தெரிவிக்கின்றனர். நகராட்சி அதிகாரிகள், பொதுப்பணித்துறை, நெடுஞ் சாலைத்துறை ஆகிய மூன்று துறை அதிகாரிகளும் மடைமாற்றும் செயலிலேயே ஈடுபடுகிறார்களே தவிர பொறுப்புகளை உணர்ந்து இந்த வடிகால்களையும், பாசன வாய்க்கால்களையும் இதுவரை சீரமைத்து செப்பணிட நடவடிக்கை எடுக்கவில்லை.

திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் கழிவுநீர் தேங்கி அதன் மூலம் கொசுக்கள் உற்பத்தியாகி பல்வேறு விஷக்காய்ச்சல்களுக்கு பலரும் ஆளாகி வருகின்றனர். அதோடு நன்கு விளைந்த பல ஏக்கர் நஞ்சை நிலங்கள் இன்றைக்கு சாகுபடி செய்ய முடியாததால் கழிவுநீர் சூழ்ந்து சதுப்பு நிலமாகவே மாறிவிட்டது. மூன்று துறை அதிகாரிகளின் போட்டா போட்டியால் திருக்கோவிலூர் நகரில் வசிக்கும் பொதுமக்கள், விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். திருக்கோவிலூர் நகரில் ஏற்கனவே பொதுப்பணித்துறைக்கு சொந்தமான பாசன வாய்க்காலான சித்தேரியான் வாய்க்கால், ஆவியூரான் வாய்க்கால், நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான செவலை ரோட்டிலும் நகராட்சி நிர்வாகம் தான் வடிகால் அமைத்து செப்பணிட்டு வருகிறது. அதேபோல மேலவீதி, வடக்கு வீதியில், நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தில் வடிகால்கள் அமைக்க டெண்டர் விடப்பட்டு ஆங்காங்கே பள்ளமும் தோண்டப்பட்டு அரைகுறையாக விடப்பட்டுள்ளது. தற்போது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான சித்தேரியில் பல கோடி ரூபாய் மதிப்பில் கழிவு கசடு சுத்திகரிப்பு திட்டத்தின் மூலம் வாய்க்கால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மூன்று துறை அதிகாரிகளின் இவ்வாறான செயலால் பொதுமக்கள் தினம் தினம் மிகுந்த சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர். விவசாயிகளும் பாசனம் இன்றியும் விளை நிலங்கள் அனைத்தும் தற்போது சதுப்பு நிலங்களாக மாறி வருகிறது என்ற குமுறலில் உள்ளனர். சந்தப்பேட்டையில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பொதுப்பணிக்கு சொந்தமான இடத்தில் ₹36 லட்சம் மதிப்பீட்டில் கட்டிய கழிவறை கட்டிடம் பல ஆண்டுகளாக பயனில்லாமல் போய்விட்டது. நிர்வாகம் நினைத்தால் எது வேண்டுமானாலும் செய்யும். மக்களின் கோரிக்கை செல்லாது. மக்களின் மத்தியில் பரவலான கருத்து எழுந்துள்ளது. மூன்று துறை அதிகாரிகளின் அலட்சியத்தையும், மடைமாற்றும் போக்கினையும் கைவிட்டு தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமிக்க மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக இயக்குனர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆகியோர் உடனடியாக நேரில் ஆய்வு செய்து கழிவு நீர் வாய்க்கால் மற்றும் பாசன வாய்க்கால்களையும் சீரமைத்து செப்பணிடவும், திருக்கோவிலூர் நகரில் நிலவும் இதர மக்கள் நல கோரிக்கைகளை நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2026 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடந்த கொலைகள் எண்ணிக்கை : 938

ஆசிரியர்





தமிழ்நாடு அமைதி பூங்கா என கூறப்பட்டு வந்த நிலையில் தமிழகத்தில் அதிகரித்து வரும் தொடர் படுகொலை சம்பவங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. முக்கியமாக தென் மாவட்டங்களான நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்த ஆண்டு இதுவரை மட்டும் மொத்தம் 141 கொலைகள் நடந்து உள்ளன. இதில் முதலிடத்தில் தூத்துக்குடி மாவட்டம் உள்ளது. 2026 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் 51 கொலைகளும், நெல்லை மாவட்டத்தில் 47 கொலைகளும், தென்காசி மாவட்டத்தில் 20 கொலைகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 23 கொலைகளும் நடந்துள்ளது.

அதேபோல் சென்னையில் 64 கொலைகளும், மதுரையில் 62 கொலைகளும், சேலத்தில் 56 கொலைகளும் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது ஒட்டுமொத்த பொதுமக்களையும் பெரும் கவலையில் ஆழ்த்தி உள்ளது. இந்த நிலையில் ஒரே நாளில் தமிழகம் முழுவதும் எட்டு கொலைகள் நடந்து உள்ளன. அது பற்றிய விவரங்களைச் சற்று விரிவாக பார்ப்போம்.

சென்னை ஐஸ் அவுஸ் வி. ஆர். பிள்ளை தெருவைச் சேர்ந்த அஜித் தன் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த போது ஐந்து பேர் கொண்ட கும்பல் அஜித்தை சுற்றி வளைத்து சரமாரியாக அரிவாள்களால் வெட்டினர். தடுக்க வந்த அவரது தாயார் சரஸ்வதி வெளியில் ஓடி வந்து மகன் வெட்டப்படுவதை தடுத்தார். ஆனால் கொலை வெறி கும்பல் அவரையும் அறிவாளால் வெட்டினார்கள். இரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிய இருவரையும் மருத்துவமனையில் சேர்த்தனர். அதில் அஜித்தை மருத்துவர்கள் பரிசோதனை செய்ததில் உயிரிழந்தது தெரியவந்தது.

நெல்லை டவுன் அருகே உள்ள மணிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் டால்டன் தன் சொந்த ஊர் கோயிலுக்குச் சென்ற போது கார் பார்க்கிங் தகராறில் டால்டன் மகன் நரேந்திரன் செந்தில் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு தாக்கிக் கொண்டனர். நிக்கோலன் ராஜரத்தினம் தடுக்க முயன்ற போது செந்தில் கத்தியால் ராஜ ரத்தினம் மார்பில் குத்தினார். அப்போது சத்தம் கேட்டு வந்த டால்டனையும் செந்தில் சரமாரியாக கத்தியால் குத்தினார். இதில் டால்டன் நிக்கோலன் ராஜரத்தினம் மூவரும் உயிரிழந்தனர்.

மயிலாடுதுறை அருகே ஆனந்த தாண்டவபுரம் பகுதியைச் சேர்ந்தவர் தமிழ்ச்செல்வர். திமுகவின் செயலாளர். முன்னேற்ற சங்க குழு உறுப்பினராகவும் அரசு பேருந்து கண்டக்டர் ஆகவும் உள்ளார். இவர் பணி முடிந்து வீட்டுக்கு இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பும் போது மர்ம நபர்களால் அரிவாலால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

தேனி மாவட்டம் கம்பத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் கூலித்தொழிலாளி சந்தோஷ் குமார் மதுபான பாரில் ஏற்பட்ட தகராறில் மோட்டார் சைக்கிளில் வந்த சுகிர் மற்றும் அவரது நண்பர்கள் இரண்டு பேர் சேர்ந்து பீர் பாட்டிலால் குத்தி கொலை செய்யப்பட்டார்.

சேலம் பெரிய புத்தூரில் மது போதையில் மீண்டும் குடிக்க பணம் கேட்டு தகராறு செய்த பேரன் விஜி பாட்டி பழனியம்மாளை அடித்து கொன்றார். தடுக்க முயன்ற தாத்தாவையும், தன் அப்பாவையும் தாக்கியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன் கனிக்கோட்டை அருகே செய்வினை செய்ததாக சித்த சரசம்மாவை கழுத்தை அறுத்து படுகொலை செய்த கணவரின் அண்ணன் மகன் அசோக்.

குமரி மாவட்டம் திங்கள் சந்தை மேகமண்டபம் அருகே உள்ள கூடமலைக் கன்றுவில் தங்க லீலா என்பவரை அவரது மகன் சிபி முகத்தை தலையணையால் அழுத்தி கொலைச் செய்துள்ளார். மது குடிக்க பணம் தராததால் தன் அப்பாவையே கொலைச் செய்து உள்ளார்.

விஜய் முதல்வராக பதவியேற்று வெறும் ஐந்து நாட்களில் 24 கொலைகள் அதாவது 140 மணி நேரத்திற்குள் மாநிலம் முழுவதும் 24 கொலைகள் அரங்கேறியுள்ளது. இது பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது என்பது மட்டும் உண்மை.

நடந்துள்ள 24 கொலைகளில் 12க்கும் மேற்பட்ட கொலைகள் கஞ்சா மற்றும் மது போதையினால் ஏற்பட்டுள்ளன என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை.

தமிழ்நாட்டில் நடந்த கொலைச் சம்பவங்கள்.. மாவட்ட வாரியாக முழு விவரம்..

"2026 ஆம் ஆண்டு மட்டும் இதுவரை நடந்த கொலைகள் எண்ணிக்கை.."

சென்னை 64, மதுரை 62, சேலம் 56, தூத்துக்குடி 51, விருதுநகர் 49, நெல்லை 47, திண்டுக்கல் 35, திருச்சி 35, தஞ்சாவூர் 34, கிருஷ்ணகிரி 33, கோயம்புத்தூர் 32, விழுப்புரம் 26, வேலூர் 26, திருப்பூர் 26, தேனி 25, நாமக்கல் 24, கன்னியாகுமரி 23, கடலூர் 23, சிவகங்கை 22, ஈரோடு 22, திருவண்ணாமலை 22, தென்காசி 20, தர்மபுரி 17, திருவாரூர் 17, காஞ்சிபுரம் 16, கள்ளக்குறிச்சி 16, திருப்பத்தூர் 16, ராமநாதபுரம் 15, நாகப்பட்டினம் 12, ராணிப்பேட்டை 10, நீலகிரி 10, புதுக்கோட்டை 10, செங்கல்பட்டு 10, மயிலாடுதுறை 7, கரூர் 7, பெரம்பலூர் 7, திருவாரூர் 6, அரியலூர் 4 ஆக 38 மாவட்டங்களில் 938 கொலைகள் நடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான காரணங்கள் பழியுணர்ச்சி, பணப்பிரச்சினை, மதுப்பழக்கம், இடத்தகராறு போன்ற காரணங்களே ஆகும்.



ஆசிரியர்

நேர்மையின் உச்சம்

Dr.P.சாமிநாதன் IPS., DIG.,

பற்றி ஒரு சிறப்புப் பார்வை..

நாட்டைக் காக்க ராணுவம், வீட்டைக் காக்க காவல்துறையும் இரு கண்களாய் இருக்கிறது என்றால் அது மிகையே அல்ல. கோவை காவல் துறை சரக டிஐஜியாக பொறுப்பேற்ற நாள் முதல் பொதுமக்கள் பாதுகாப்புடன் இருக்க வேண்டும், நிம்மதியாக மகிழ்ச்சியாக எங்கும் எந்த நேரத்திலும் வெளியில் சுதந்திரமாக சென்று வர வேண்டும், குற்றச்சம்பவங்கள் நடப்பதை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்று எண்ணி அதை செயல்படுத்தியும் வருகிறார்.

தமிழக காவல்துறையில் எத்தனையோ அதிகாரிகள் இருந்தாலும் ஒரு சில அதிகாரிகள் தான் தன் நேர்மையான திறமையான செயல்பாடுகளால் மக்கள் இதயங்களில் குடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் டாக்டர் சாமிநாதன் ஐபிஎஸ் டிஐஜி மக்கள் இதயங்களில் நீங்கா இடம் பிடித்து விட்டார் என்றால் அது மிகையே அல்ல.

தமிழக காவல்துறையில் பணியாற்றுபவர்கள் முடிந்த அளவிற்கு தங்களின் துறை சார்ந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள் என்றாலும் காக்கிச்சட்டைக்குள்ளும் அன்பு, கருணை பொங்கும் வகையிலும் பலர் பணியாற்றி வருகின்றனர். அந்த வகையில் நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழில் பல நேர்மையான காவல்துறை அதிகாரிகளைப் பற்றி தொடர்ந்து எழுதி வருகிறோம். தமிழக காவல்துறைக்கு பெருமை சேர்க்கும் வகையில் ஈர இதயத்துடன் கோவை மாவட்டத்தில் டாக்டர் சாமிநாதன் ஐபிஎஸ் டிஐஜி காவல்துறை பணிகளோடு மக்கள் நலப் பணிகளையும் மிகச் சிறப்பாக செய்து வருகிறார்.

இவர் கால்நடை மருத்துவத்தில் முதுகலை பட்டம் படித்தவர். நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் படித்தார். காவல்துறையின் மீது இவர் கொண்டுள்ள காதலால் தேர்வு எழுதி வெற்றி பெற்று 2012ல் காவல்துறையில் தன் தடத்தைப் பதித்தார். 2021 இல் காவல் கண்காணிப்பாளராக செக்யூரிட்டி பிரான்ச் சி ஐ டி 11 சென்னையில் பணி புரிந்தார். 2024 இல் காவல் கண்காணிப்பாளராக விஜிலென்ஸ் அண்ட் ஆன்டி கரப்ஷன் சவுத் அண்ட் ரேஞ்சில் பணியாற்றினார். பின்பு 2026 இல் திண்டுக்கல் காவல்துறை சரக டி ஐ ஜி யாகப் பணியாற்றினார். தற்போது கோவை சரக டிஐஜி யாக மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

இவர் எங்கு பணி புரிந்தாலும் அங்கு தன் தனி முத்திரை பதிப்பார். கோவை சரக டிஐஜி யாக பதவியேற்ற நாளிலிருந்து தினமும் பல அதிரடி செயல்களைச் செய்து மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து விட்டார். பதவி ஏற்ற நாளிலிருந்து 24 மணி நேரமும் மக்களுக்காகவே உழைத்துக் கொண்டு இருக்கும் ஓர் அற்புதமான மாமனிதர். தன் சரகத்திற்குள் எந்த ஒரு சமூக விரோத செயல்கள் எதுவும் நடக்காமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்று விட்டார். இவரை எந்த நேரத்திலும் பொதுமக்கள் சந்திக்கலாம். தங்கள் குறைகளைக் கூறலாம். இவர் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார்.

இவர் லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர் என வாழ்ந்து வருகிறார். இவருக்கு தமிழில் பிடிக்காத வார்த்தை லஞ்சம். இவர் எங்குப் பணி புரிந்தாலும் அங்கு சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பதில் இவருக்கு நிகர் இவரே ஆவார். நீதி, நேர்மை, நாணயம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கடின உழைப்பு, தன்னம்பிக்கை என வாழ்ந்து வருபவர்.

இவர் திருப்பூரில் பணிபுரிந்த போது பல அதிரடி நடவடிக்கைகளால் மக்கள் மனதில் இடம் பிடித்தார். அதே பெருமளவில் சமூக குற்றங்களை குறைத்தார். இவர் தமிழக காவல்துறைக்கு பெருமை சேர்க்கும் வகையில் நேர்மையாக பணியாற்றி வருகிறார். கோவை மண்டல மக்களின் இதயங்களை தன் அன்பால் கொள்ளைக் கொண்டவர். இன்றைய இளைஞர்களுக்கு ஹீரோவாகவும் ரோல் மாடலாகவும் இருக்கிறார் என்றால் அது மிகை அல்ல.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே அற்றந் உம் பகை.

குற்றம் புரிவது அழிவை உண்டாக்கக் கூடிய பகையாக மாறுவதால் குற்றம் புரியாமல் இருப்பது என்பதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்ற

வாக்கியத்திற்கு நங்க நடந்து கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் தண்டிக்கப்படுவார்கள். மக்கள் பணியே மகேசன் பணி என்பது முதுமொழி. பொதுமக்களை காக்கும் பணியே தலைசிறந்தது என்பது இவரது புது மொழி ஆகும். அப்படி சிறப்பு மிக்க மனிதரை நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழில் எழுதுவதில் நமது பேனா பெருமிதம் கொள்கிறது. நேர்மையின் உச்சமாக திகழும் கோவை சரக டிஐஜி டாக்டர் சாமிநாதன் ஐபிஎஸ் பணி மென்மேலும் சிறக்க நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். தொடரட்டும் உங்களின் நேர்மைமிகு பணிகள்..





ஜீவநதி மலட்டாற்றில் ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்ட மணல் திட்டுகளைத் தனது சொந்த செலவில் தூர்வாரும் விவசாயிகளின் பசுமை நாயகன்

சேமங்கலம் எஸ்.வி.எம்.தட்சிணாமூர்த்தி ரெட்டியார்..

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே அரசூர் முதல் திருக்கோவிலூர் அணைக்கட்டு வரை ஜீவநதி மலட்டாறு பகுதியில் கடந்த 2024 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஃபெஞ்சல் புயலின் போது பல்வேறு விவசாய நிலங்களில் விளைந்த கரும்பு, நெல், சவுக்கை, மணிலா, மரவள்ளி, கொய்யா, வாழை, அரும்பு உள்ளிட்ட விவசாய பயிர்கள் பெரும் வெள்ளத்தில் சிக்கி நிலம் முழுவதும் மண் அரிப்பு ஏற்பட்டு தரைமட்டமாக்கியது. இந்த இயற்கை பேரிடரால் பல கோடி ரூபாய் மதிப்பிலான சிறு குறு விவசாயிகளின் விலை பொருட்கள் பெரும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இதனால் விவசாயிகள் வாங்கிய கடனைக் கூட திருப்பிச் செலுத்த முடியாமல் கண்ணீரில் மூழ்கினர்.

இந்த பெரும் வெள்ள சேதத்தால் விவசாய நிலங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டது. ஜீவநதி மலட்டாறு முழுவதும் வெள்ளத்தால் மணல் திட்டுக்கள் ஆங்காங்கே மேடு பள்ளம் மற்றும் கரைகளின் இரு புறங்களிலும் மண்ணரிப்பு ஏற்பட்டு கரைகள் சிதலமடைந்து பாதைகள் மாறியது. விவசாய நிலம் எது.? கரை எது.? என தெரியாத அளவிற்கு ஃபெஞ்சல் புயல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி சென்றது. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடந்த மூன்று ஆண்டு காலமாக விலை நிலங்கள் விளைச்சல் இல்லாமல் முடங்கி கிடந்தது. இதனால் விவசாய நிலத்திற்கு தண்ணீர் போக வழி இல்லாமல் ஜீவநதி மலட்டாறில் திட்டுத்திட்டாக தண்ணீர் தேங்கி நின்றது.



ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்ட பேரழிவை கடந்த ஆட்சியின் போது துறை சார்ந்த அதிகாரிகள், மந்திரிகள், எம்.எல்.ஏ.,க்கள் ஆய்வு செய்தும் நடவடிக்கை எடுக்காமல் கிடப்பில் போட்டனர். இதனால் கடந்த 02-12-2024 முதல் 2026 வரை தமிழக அரசு கண்டுகொள்ளாமலும் மணல் திட்டுகளைத் தூர் வாராததால் விவசாயிகளைக் கண்ணீர் மல்க புலம்ப வைத்தது.

ஜீவநதி மலட்டாறால் பயன்பெறும் 100 க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கவும் அவர்களின் கண்ணீரைத் துடைக்கவும் வந்தவர் தான் திருவெண்ணெய்நல்லூர் சுற்றுவட்டார கிராம மக்களால் பெரும் கம்பத்தம் என்று அழைக்கக்கூடிய ஆளுமை மிக்க பெரும் விவசாய குடும்பத்தில் பிறந்த சேமங்கலம்



எஸ்.வி.எம்.தட்சிணாமூர்த்தி ரெட்டியார் ஆவார். இவரை சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைத்து சமூகத்தினராலும் கம்பத்தம் என்று அன்போடு அழைக்க கூடியவர். இவர் "ஜீவநதி மலட்டாறு நிலத்தடி நீர் மேம்பாட்டு எழுச்சிக்கூடல் என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கி அனைவராலும் போற்றக்கூடிய எஸ்.வி.எம்.தட்ணாமூர்த்தி ரெட்டியார் அதன் தலைவர் ஆனார். அப்போது திருவெண்ணெய்நல்லூர் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகள் இவரது இல்லத்தில் நேரில் சந்தித்து மலட்டாற்றில் ஃபெஞ்சல் புயல் காரணமாக ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் ஜீவநதி மலட்டாறில் ஆங்காங்கே உள்ள மணல் திட்டுக்களைத் தூர்வார கோரிக்கை முன்வைத்தனர். இதையடுத்து திருவெண்ணெய்நல்லூர் கள்ளுக்கடை மூலை ஜீவநதி மலட்டாறில் கணபதி பூஜை மற்றும் லட்சுமி பூஜையுடன் யாகசாலைகள் அமைத்து வருண பகவானை வழிபட்டு சேமங்கலம் எஸ்.வி.எம்.தட்சிணாமூர்த்தி ரெட்டியார் தூர் வாரும் பணியினை துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து விழாவில் கலந்து கொண்ட சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அவரின் திருகரங்களால் உணவு வழங்கினார்.

இதை அடுத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் ஓங்கி நிற்க ஜீவநதி மலட்டாறில் சுமார் 35 கிலோமீட்டர் தொலைவிற்கு ஹிட்டாச்சி மற்றும் ஜேசிபி இயந்திரம் மூலம் சொந்த பணத்தில் மணல் திட்டுக்கள் மேடு பள்ளம் இல்லாமல் இரு கரைகளின் ஓரங்களிலும் மண்ணரிப்பை தடுப்பதற்கு அணை அமைத்து தண்ணீர் தடை இல்லாமல் நேராக ஆற்று வழியாகச் செல்லவும், விவசாய பாசனத்திற்கும், ஆழ்துளை கிணறு ஊற்று எடுப்பதற்கும், நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கும் வழிவகை செய்தார். மேலும் எதிர்வரும் காலங்களில் இதுபோன்று வெள்ள பாதிப்பு ஏற்பட்டால் கரைகளையும், விவசாய நிலங்களையும் ஜீவநதி மலட்டாறு பகுதிகளையும் பாதுகாத்து வருகிறார். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து விவசாயிகள் 3 போகமும் மகசூல் பயிர் செய்வதற்கு பசுமை நாயகனாக எஸ்.வி.எம்.தட்சணாமூர்த்தி ரெட்டியார் இருந்து வருகிறார்.

இத்தகையச் செயலைப் பாராட்டி விவசாயிகள் மட்டுமல்லாமல் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள் இவரின் செயலை நேரிலும், தொலைபேசி மூலமாகவும், சமூக வலைதளங்கள் மூலமாகவும் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.

அது மட்டுமல்லாமல் ஆண்டுதோறும் விஜயதசமி தினத்தன்று அரசூரில் ஜீவநதி மலட்டாறில் மழை வர வேண்டி வருண பூஜை நடத்தி வருகிறார். இந்த பூஜையின் மூலம் ஆண்டுதோறும் அதிக மழைப்பொழிவு ஏற்பட்டு மலட்டாறில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதை அனைத்து மக்களும் கண்கூடாகப் பார்த்து மகிழ்ச்சி அடைவது உண்மை சம்பவமாக இருந்து வருகிறது. இத்தகைய செயலின் மூலம் விவசாயிகளின் உற்ற நண்பனாகவும், வாழும் நம்மாழ்வாராகவும், விவசாயிகளின் பசுமை நாயகனாகவும் சேமங்கலம் எஸ்.வி.எம்.தட்சிணாமூர்த்தி ரெட்டியார் இருந்து வருகிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை..



தலைமை நிருபர் சென்னை வினோத்குமார்



ஓராண்டை கடந்தும் ஓயாத வேகம்!”

திருமுடிவாக்கம் காவல்நிலையத்தின் தொடர் சாதனை பின்னணி...

பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தொடர்ந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் திருமுடிவாக்கம் காவல்நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து, அதன் பின்னணி மற்றும் காவல்துறையின் களப்பணிகளை அலசுகிறது இந்த சிறப்புத் தொகுப்பு.

இதனையடுத்து, “நமது விஜிலென்ஸ்” புலனாய்வுக் குழு, திருமுடிவாக்கம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பொதுமக்களை நேரடியாக சந்தித்து நடத்திய அதிரடி கள ஆய்வு மற்றும் சிறப்பு சர்வே ரிப்போர்ட் இது.

காவல்துறையின் செயல்பாடு குறித்து பொதுமக்களின் கருத்து என்ன?

காவல்நிலையத்தின் அணுகுமுறை எப்படி உள்ளது?

புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் விதம் எப்படி?

மக்களுக்கும் காவல்துறைக்கும் இடையிலான நம்பிக்கை எந்த நிலையில் உள்ளது?

இந்தக் கேள்விகளுக்கான கள உண்மைகளையும், பொதுமக்களின் நேரடி கருத்துகளையும் தொகுத்து வழங்குகிறது இந்த புலனாய்வு பதிவு

ஒரு ஆண்டை கடந்தும்... தொடரும் சாதனைப் பயணம்!

“குற்றவாளிகளுக்கு கெடுபிடிஞ் பொதுமக்களுக்கு நம்பிக்கை!”

சட்டம்–ஒழுங்கில் தீவிரம்...

குற்றத்தடுப்பில் அதிரடி...

மக்கள் தொடர்பில் புதிய அணுகுமுறை!

“ஒரு வருடம்ஞ் பல சாதனைகள்!”

திருமுடிவாக்கம் காவல்நிலையம் –குற்றத்திற்கு எதிராகடும் நடவடிக்கை, மக்களிடம் நெருக்கமான அணுகுமுறை!

புதிய காவல் நிலையம்ஞ் அதிரடி நடவடிக்கைகள்ஞ் குற்றவாளிகளுக்கு குண்டர் சட்டம்!

சென்னை புறநகர் பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் தொழில் பகுதிகளில் ஒன்றான திருமுடிவாக்கம். ஒருபுறம் நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்கள்... மறுபுறம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் நடமாட்டம்... இதற்கிடையே ரவுடிகள் மற்றும் சமூக விரோதிகளின் அச்சுறுத்தலும் இருந்ததாக கூறப்பட்ட நிலையில், திருமுடிவாக்கத்தில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்பட்டது.

20.09.2025 முதல் செயல்பாட்டுக்கு வந்த திருமுடிவாக்கம் காவல் நிலையம், கடந்த ஓராண்டில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளால் தற்போது குற்றவாளிகளுக்கு கடும் சவாலாக மாறியுள்ளது.

சுமார் 600 தனியார் நிறுவனங்களைக் கொண்ட சிட்கோ தொழிற்பேட்டை, 30,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், அதில் சுமார் 10,000 வெளிமாநிலத் தொழிலாளர்கள் என பரபரப்பாக இயங்கும் பகுதி திருமுடிவாக்கம். இத்தகைய முக்கியமான பகுதியில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது காவல்துறைக்கு மிகப்பெரிய சவாலாக இருந்த நிலையில், திருமுடிவாக்கம் போலீசார் தொடர் கண்காணிப்பையும் அதிரடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

2,781 கிலோ குட்கா பறிமுதல் :

தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் பான்மசாலா விற்பனைக்கு எதிராக போலீசார்

மேற்கொண்ட நடவடிக்கையில், கடந்த ஓராண்டில் மட்டும் 23 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2,781 கிலோ தடை செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் சட்டவிரோதமாக விற்பனை செய்ததாக கண்டறியப்பட்ட 20 கடைகளுக்கு உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மூலம் சீல் வைக்கப்பட்டுள்ளது.

52 கிலோ கஞ்சாஞ் 31 வழக்குகள் :

கஞ்சா விற்பனையையும் போலீசார் விட்டுவைக்கவில்லை. சட்டவிரோத கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர்களை கைது செய்து 31 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் 52 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக கூறப்படும் 13 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரவுடிகளுக்கு இரும்புக்கரம் :

பொதுமக்களை அச்சுறுத்தி வந்த ரவுடிகள் மற்றும் சமூக விரோதிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டது.

சுமார் 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய ரவுடிகள் என குறிப்பிடப்பட்ட 11 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டு தயாரித்த ரவுடி :

இந்த நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க சம்பவமாக, திருமுடிவாக்கத்தைச் சேர்ந்த சரித்திரப் பதிவேடு குற்றவாளியான கருப்பு என்கிற தமிழரசன், தனது எதிரியை கொலை செய்வதற்காக மாதா கல்லூரி எதிரே உள்ள காலி மைதானத்தில் கூட்டாளிகளுடன் சேர்ந்து வெடிகுண்டு தயாரித்துக் கொண்டிருந்ததாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

அவரை கைது செய்ய போலீசார் சென்றபோது, போலீசாரைக் கத்தியால் வெட்ட முயன்றதாகவும், பின்னர் போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தி அவரைப் பிடித்ததாகவும் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரியல் எஸ்டேட் அதிரடி :

திருமுடிவாக்கம், பழந்தண்டலம், எருமையூர் பகுதிகளில் ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர்களை மிரட்டி பணம் பறித்ததாக கூறப்படும் A+ சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளான மேத்யூ, செந்தமிழ் செல்வன் மற்றும் கருணா ஆகியோரும் கைது செய்யப்பட்டு, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளுக்கு அச்சம்... பொதுமக்களுக்கு நிம்மதி :

தொடர் நடவடிக்கைகளின் விளைவாக, திருமுடிவாக்கம் பகுதியில் ரவுடிகள் மற்றும் சமூக விரோதிகளின் நடமாட்டம் வெகுவாக குறைந்துள்ளதாக பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்து வருகின்றனர்.

புதிய காவல் நிலையம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்ன? பொதுமக்களுக்கு விரைவான காவல் உதவி கிடைக்க வேண்டும் என்பதே!

அந்த நோக்கத்தை நோக்கி திருமுடிவாக்கம் காவல்துறை தொடர்ந்து செயல்பட்டு வருவதுடன், குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் மூலம் சட்டம்ஒழுங்கை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்தி வருகிறது.

காவல்துறை உயர் அதிகாரிகளின் வழிகாட்டுதலின் கீழ், திருமுடிவாக்கம் பகுதியில் சட்டம் ஒழுங்கை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன்படி, களப்பணிக்கான திட்டம் வகுக்கப்பட்டு, தொடர் கண்காணிப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

திருமுடிவாக்கம் காவல் நிலையம் தொடங்கப்பட்ட நாள் முதல், தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் மற்றும் இணை ஆணையாளர் உத்தரவின் பேரிலும், தாம்பரம் மாவட்ட காவல் துணை ஆணையாளர் அறிவுறுத்தலின் பேரிலும், பல்லாவரம் சரக உதவி காவல் ஆணையாளர் நேரடி மேல்பார்வையிலும் சிறப்பான காவல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

களத்தில் களமிறங்கியது, திருமுடிவாக்கம் காவல் ஆய்வாளர் முத்துக்குமார் தலைமையிலான தனிப்படை மற்றும் காவல் துறையினர்...

பகல்இரவு பாராமல் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்புகள்ஞ் ரகசியத் தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணைகள்ஞ் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டவர்களைப் பின்தொடர்ந்த நடவடிக்கைகள்... என காவல்துறையின் வேட்டை தொடர்ந்து கொண்டே இருந்தது.

அதன் விளைவாக, திருமுடிவாக்கம் காவல் எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு நடவடிக்கையும் அப்பகுதியில் காவல்துறையின் கண்காணிப்பு மேலும் தீவிரமடைந்துள்ளதை வெளிப்படுத்தியது.

இந்த ஓராண்டு கால காவல் பணியின் மூலம், திருமுடிவாக்கம் பகுதியில் பொதுமக்களுக்கும் காவல்துறைக்கும் இடையிலான நம்பிக்கை மேலும் வலுப்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்களிடையே கருத்துகள் நிலவுகின்றன.

சட்டம்ஒழுங்கைப் பாதுகாப்பதில் தொடர்ந்து களப்பணியாற்றி வரும் காவல் ஆய்வாளர் முத்துக்குமார் மற்றும் அவரது தனிப்படையினரின் பணியை, விஜிலென்ஸ் குடும்பம் பாராட்டி, மனமார்ந்த வாழ்த்துகளைப் பதிவு செய்கிறது.

குற்றத்திற்கு எதிரான கண்காணிப்பு தொடர்கிறது...

சட்டத்தின் காவல் என்றும் ஓயாது.



தலைமை நிருபர் பெரம்பலூர் அழகேசன்

லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர் என வாழும்

SP Dr.P லலித் குமார். IPS.,

பெரம்பலூர் மாவட்டத்தின் காவல் துறை கண்காணிப்பாளராக டாக்டர் V. லலித் குமார் இ.கா.ப. 28 வது புதிய போலீஸ் எஸ் பி ஆக பதவியேற்று கொண்டார். முன்னதாக கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் ஏ.எஸ்.பியாக பணிபுரிந்து வந்தவர். எம்.பி.பி.எஸ் படித்த இவர் கேரள மாநிலம் கொல்லத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பதவி ஏற்ற பிறகு மாவட்ட போலீஸ் குற்றங்கள் செய்பவர்களையும், எங்களுக்கு எதிராகவும், போதை பொருட்கள் ஒழிக்கவும், அதிகப்படியான ரவுடிசம் சம்பந்தமான செய்பவர்களை கட்டுப்படுத்துவதும், கூடுதல் ரவுடிகளையும் கட்டுப்படுத்தவும் அது முக்கிய குறிக்கோளாக இருக்கும் என்றும், அதோடு மட்டுமல்லாமல் இம்மாவட்டத்தை ச் சிறப்பாக ரன் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும், தகுதி வாய்ந்த திறமையான குழுவுடன் கண்டிப்பாக பொது மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிற மாதிரி நம்ம பெரம்பலூர் காவல்துறை சிறப்பாக நடத்த வேண்டும் என்பதே இவரின் நோக்கம் என தெரிவித்தார்.

அதன் பிறகு பெரம்பலூர் மாவட்டம் அரும்பாவூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வேப்பந்தட்டை பகுதியில் நடைபெற்ற இரண்டு வழிப்பறி குற்ற வழக்குகளில் தொடர்புடைய நபர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். லலித்குமார் இ.கா.ப உத்தரவின் பேரில் தனிப்படை அமைத்து தேடப்பட்டு வந்த நிலையில் Arumbavur PS Cr.No.208/26 U/s 296 (b), 309 (6) BNS & Cr.No.209/26 U/s 296 (b), 309 (6) BNS ஆகிய வழிப்பறி குற்ற வழக்குகளில் தொடர்புடைய நபர்களான வெங்கடேஷ் (26) த/பெ கலியபெருமாள் முருகன் வடக்கு மாதவி கிராமம், பெரம்பலூர் வட்டம், பெரமபலூர் மாவட்டம் மற்றும் ஒரு இளஞ்சிறார் ஆகிய இருவரையும் கைது செய்து அவர்களை விசாரணை செய்ததில் மேற்படி இருவரும் பல்வேறு குற்ற வழக்குகளில் ஈடுபட்டுள்ளது தெரிய வந்தது.

இந்நிலையில் அவர்களை மேலும் விசாரணை செய்ததில் அவர்களிடமிருந்து பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய 04 இரு சக்கர வாகனங்களைப் பறிமுதல் செய்தனர்.

தன்னுடைய சிறப்பான காவல் பணியால் டாக்டர் லலித் குமார் இ.கா.ப தமிழக அரசின் அண்ணா பதக்கத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் பெரம்பலூர் மாவட்டமே மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது. பெரம்பலூர் மாவட்ட காவலர்களுக்கு தனது பாராட்டு மற்றும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

பெரம்பலூர் மாவட்ட காவல் துறையில் பணியாற்றி வரும் சிறப்பு உதவி ஆய்வாளர் சித்ரா மற்றும் தலைமை காவலர் சுதாகர் ஆகியோர் காவல் துறையில் ஆற்றிய சிறப்பான மற்றும் நேர்மையான பணியைப் பாராட்டி தமிழக அரசின் உயரிய "அண்ணா பதக்கம் "வழங்கி கௌரவித்துள்ளார். இவர்கள் தமிழ்நாடு காவல்துறையில் பணியில் சேர்ந்த நாள் முதல் இன்று வரை சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் காவல் பணிகளில் பொறுப்புணர்வுடனும் திறம்படவும் செயல்பட்டு தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்த பெருமைமிக்க விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஆலத்தூர் தாலுகா பாடலூர் கிராமப் பகுதிகளில் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலவரத்தை ஆய்வு செய்யும்

வகையில் நடை ரோந்து பணியில் ஈடுபட்டார். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் குற்ற தடுப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த ரோந்து மேற்கொள்ளப்பட்டது.

ரோந்து பணியின் போது காவல்துறையினரின் செயல்பாடுகளை ஆய்வு செய்த அவர் பொதுமக்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைகள் மற்றும் கருத்துக்களைக் கேட்டறிந்தார். மேலும் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிர படுத்தவும் பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் சட்ட விரோத செயல்களையும் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும் காவல்துறையினருக்கு அறிவுறுத்தினார்.

இந்தநடைரோந்துமூலம்பொதுமக்களிடையே பாதுகாப்பு உணர்வு அதிகரித்ததுடன் காவல்துறை மீது நம்பிக்கையும் அதிகரித்துள்ளது. மேலும் பெரம்பலூர் மாவட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தமிழ்நாடு காவலர் தின நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசு 1859 ஆம் ஆண்டு மெட்ராஸ் காவல் சட்டம் இயற்றப்பட்ட நாளான செப்டம்பர் 6ஆம் நாள் காவலர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து 06.09.2026 ஆம் தேதி பெரம்பலூர் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் காவல்துறையில் சேர்ந்து கடமையாற்றி பல வீர தீர செயல்கள் புரிந்து உயிர் நீத்த காவலர்களுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தும் நிகழ்வு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் லலித் குமார் இ.கா.ப தலைமையில் நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்கள், ஆயுதப்படை வளாகம், போக்குவரத்து காவல் நிலையம் மற்றும் அனைத்து காவல் அலுவலகங்களிலும் காவலர்கள் தங்கள் காவலர் தின உறுதிமொழியை ஏற்று கொண்டார்கள்.மேலும் பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் சீரிய முறையில் செய்திட நம்பிக்கைக்கு உரிய நபராகச் செயல்பட்டு வரும் பெரம்பலூர் மாவட்ட இளைஞர்களின் ரோல் மாடலாகத் திகழும் நமது பெரம்பலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரின் பணி மென்மேலும் சிறக்க நமது விஜிலென்ஸ் பத்திரிக்கை, விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளையின் சார்பில் வாழ்த்துக்களை மனதார தெரிவித்துக் கொள்கிறோம். தொடரட்டும் உங்களின் அற்புதமான காவல் பணிகள்..











வேகம் • விவேகம் • வீரியம்

காவல் பணியில் தனித்துவம் பதிக்கும் பெண் அதிகாரி

பொன்னி IPS.,

பற்றி ஒரு சிறப்புப் பார்வை..

களத்தில் கம்பீரம்... காவலர்களிடம் கருணை!

தமிழக காவல்துறையில் அதிரடி காட்டிய பெண் IPS... CISFல் புதிய பொறுப்பில் புதிய அத்தியாயம்!

மாவட்டங்களை மிரட்டிய மாஃபியாக்களுக்கு எதிராக அதிரடி...

சட்டத்தை நிலைநாட்டுவதில் கண்டிப்பு...

கீழ்நிலை வீரர்களிடம் மனிதநேயம்...

விமான நிலைய பாதுகாப்பில் புதிய சவால்கள்!

"பதவி உயர்ந்தாலும்... மனிதநேயம் உயர்ந்தே இருக்க வேண்டும்!"

ஒரு பெண் IPS அதிகாரியின் பெருமையான பக்கங்கள்..

மாவட்டங்களைக் கலக்கிய அதிரடி அதிகாரி...

CISFல் புதிய அத்தியாயம் படைக்கும் பெண் IPS!..

சவால்களைச் சந்திக்கும் துணிச்சல்...

சட்டத்தை நிலைநாட்டும் கண்டிப்பு...

கீழ்நிலை காவலர்களிடம் காட்டும் மனிதநேயம்...

ஒரு காவல் அதிகாரியின் பணியை மதிப்பிடுவது அவரது பதவியை வைத்து மட்டும் அல்ல. அவர் எதிர்கொண்ட சவால்கள் என்ன? அந்த சவால்களுக்கு அவர் கொடுத்த பதில் என்ன? அவருக்கு கீழ் பணியாற்றியவர்கள் அவரைப் பற்றி என்ன சொல்கிறார்கள்? என்பதில் தான் அந்த அதிகாரியின் உண்மையான அடையாளம் தெரியும்.

அந்த வகையில், 2008ஆம் ஆண்டு பேட்ச் IPS அதிகாரியான R.பொன்னியின் காவல் பயணம் தனித்துவமான பல அத்தியாயங்களைக் கொண்டது.

அரசின் அதிகாரப்பூர்வ IPS பதிவுகளின்படி, பொன்னி 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு கேடரில் சேர்ந்தவர். தற்போது CISFல் DIG அந்தஸ்தில் பணியாற்றி வருகிறார்.

ஆரம்பமே அதிரடி :

திருப்பத்தூரில் ASP ஆக தனது காவல் பணியைத் தொடங்கிய பொன்னி, பின்னர் தமிழகத்தின் பல்வேறு முக்கிய மாவட்டங்களில் SP உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தார். சட்டம்ஒழுங்கு மட்டுமல்லாமல், குற்றத் தடுப்பு, சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கை, நுணுக்கமான காவல் நிர்வாகம் என பல்வேறு தளங்களில் தனது பணித்திறனை வெளிப்படுத்தியவர் என்ற பெயரைப் பெற்றார்.

2011ஆம் ஆண்டு செங்கல்பட்டு பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலுக்கு எதிராக அவர் மேற்கொண்ட நடவடிக்கை அப்போது பெரும் கவனத்தைப் பெற்றது. ஒரே நடவடிக்கையில் 26 மணல் லாரிகளைத் தடுத்து நிறுத்தியதோடு, பின்னர் நூற்றுக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக அன்றைய செய்தி பதிவுகள் குறிப்பிடுகின்றன.

இந்த துணிச்சலான நடவடிக்கைக்காக, 2014 ஆம் ஆண்டு தமிழக அரசின் 'கல்பனா சாவ்லா விருது' அவருக்கு வழங்கப்பட்டது.

"சட்டம்... சட்டம் மட்டுமே!"

அதிகாரத்தை காட்டுவதற்காக அதிகாரம் செலுத்துவது வேறு...

சட்டத்தை நிலைநாட்டுவதற்காக அதிகாரத்தை பயன்படுத்துவது வேறு!

பொன்னியின் பணிப்பாணியைப் பற்றி பேசுபவர்கள் அடிக்கடி குறிப்பிடும் அம்சங்களில் ஒன்று : சட்டத்தை மீறுபவர்களிடம் தயக்கம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கும் அணுகுமுறை.

மணல் கடத்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிரான அவரது முந்தைய பணிகள் இதற்கு ஒரு உதாரணமாக

பதிவாகியுள்ளன.

அதனால் தான், "பெண் அதிகாரி" என்ற அடையாளத்தைத் தாண்டி, "களத்தில் இறங்கி முடிவெடுக்கும் அதிகாரி" என்ற தனித்த அடையாளத்தை அவர் உருவாக்கியதாக அவரது பணிப்பதிவுகளைப் பார்க்கும்போது தெரிகிறது.

தமிழகத்திலிருந்து CISFக்கு...

2024ஆம் ஆண்டு மத்திய உள்துறை அமைச்சகம், ஸி. பொன்னியை CISFல் DIG ஆக ஐந்து ஆண்டுகள் வரை deputation அடிப்படையில் நியமிக்க ஒப்புதல் வழங்கியது.

அதன்பிறகு, தமிழக காவல் பணியில் இருந்து மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையின் முக்கிய பொறுப்புக்குள் அவர் சென்றார்.

2025ஆம் ஆண்டுக்கான தமிழக IPS Civil List லும் அவர் DIG, CISF எனப் பதிவாகியுள்ளார்.

தென் மண்டலத்தின் விமான நிலையங்கள் மற்றும் முக்கிய கட்டமைப்புகளின் பாதுகாப்பு சார்ந்த பணிகளில் அவர் ஈடுபட்டிருப்பது அதிகாரப்பூர்வ CISF/PIB பதிவுகளிலும் வெளிப்படுகிறது. 2025ஆம் ஆண்டு CISF தென் மண்டல நிகழ்வொன்றில் DIG R.பொன்னி பங்கேற்று உரையாற்றியதாக PIB பதிவு செய்கிறது.

விமான நிலைய பாதுகாப்பு... சாதாரண பொறுப்பு அல்ல!

ஒரு விமான நிலையத்தின் பாதுகாப்பு என்பது வெறும் நுழைவாயிலில் சோதனை நடத்துவதோடு முடிந்து விடுவதில்லை.

பயணிகள் பாதுகாப்பு...

விமானப் பாதுகாப்பு...

முக்கிய கட்டமைப்புகளின் பாதுகாப்பு...

அவசரநிலை மேலாண்மை...

பல்வேறு பாதுகாப்பு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு... என மிகப்பெரிய பொறுப்பு.

அதிலும் சென்னை போன்ற முக்கியமான சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு என்பது தனித்துவமான சவால்.

அதிகாரத்தின் மறுபக்கம்... மனிதநேயம் :

ஒரு உயரதிகாரியின் உண்மையான உயரம் அவரது பதவியால் மட்டும் அளவிடப்படுவதில்லை. அவருக்கு கீழ் பணியாற்றும் கடைநிலை ஊழியரை அவர் எப்படி பார்க்கிறார் என்பதிலும் அது தெரியும். CISF போன்ற மத்திய பாதுகாப்புப் படைகளில் பணியாற்றும் வீரர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

குடும்பத்தை விட்டு தொலைதூரப் பணிகள்...

தொடர்ச்சியான பாதுகாப்புப் பணிகள்...

அவசரநிலை பணிகள்...

இடைவிடாத கண்காணிப்பு...

இவை அனைத்தும் அவர்களது பணியின் அன்றாட சவால்கள்.

அத்தகைய சூழலில், "கட்டளை பிறப்பிக்கும்









அதிகாரி" என்பதைக் கடந்து "தன் படையினரைப் புரிந்து கொள்ளும் அதிகாரி" என்ற அணுகுமுறை மிகவும் முக்கியமானது.

பொன்னியின் பணிப்பாணியைப் பற்றி பேசும்போது இந்த மனிதநேய அம்சமும் குறிப்பிடப்படுகிறது.

ஒரு அதிகாரியின் வெற்றி... ஒரு படையின் மனநிலையிலும் இருக்கிறது!

பாதுகாப்புப் பணியில் இருக்கும் வீரர்களின் மன அழுத்தம் என்பது சாதாரணமாக புறக்கணிக்கக் கூடிய விஷயம் அல்ல.

நீண்ட நேர பணிச்சுமை, குடும்பத்திலிருந்து பிரிவு, தொடர்ச்சியான பாதுகாப்பு பொறுப்புகள் போன்றவை பாதுகாப்புப் படையினரின் மனநிலையை பாதிக்கக்கூடிய காரணிகளாக இருக்கலாம். அதனால், அவர்களை உற்சாகப்படுத்தும் நிகழ்ச்சிகள், விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்வுகள், அதிகாரிகள் வீரர்கள் நேரடி கலந்துரையாடல்கள் போன்றவை அமைப்பின் மனிதவள மேலாண்மையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

CISFன் அதிகாரப்பூர்வ நிகழ்வுகளிலும் மனநலம், உடல் தகுதி, குழு உற்சாகம் போன்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவது பதிவாகியுள்ளது.

இன்று CISF வீரர்களிடையே எழும் இந்தக் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு.

ஒரு அதிகாரி நல்ல நிர்வாகத்தை வழங்குவது மட்டுமல்ல...

அவருக்கு கீழ் பணியாற்றும் ஆயிரக்கணக்கான வீரர்களுக்கு "நாம் ஒரு குடும்பம்" என்ற நம்பிக்கையை உருவாக்குவதும் முக்கியம். அந்த நம்பிக்கையை உருவாக்கும் அதிகாரிகள் தான் காலம் கடந்தும் நினைவில் நிற்பார்கள்.

பொன்னியின் பயணம் இன்னும் தொடர்கிறது.

தமிழக காவல்துறையின் களப்பணியில் தொடங்கிய அந்த பயணம் இன்று CISFன் முக்கிய பொறுப்புகளுக்குள் வந்திருக்கிறது.

சட்டவிரோத மணல் கடத்தலுக்கு எதிராக களத்தில் நின்ற அந்த அதிகாரி இன்று நாட்டின் முக்கியமான விமான நிலையங்கள் மற்றும் முக்கிய கட்டமைப்புகளின் பாதுகாப்புப் பணியில்



நிற்கிறார்.

பதவி மாறலாம்...

இடம் மாறலாம்...

சீருடை மாறலாம்...

ஆனால் களத்தில் செயல்படும் ஒரு அதிகாரியின் அடையாளம் மட்டும் மாறாது!

பொன்னி — ஒரு பெயர் அல்ல...

களத்தில் நிரூபிக்கப்பட்ட ஒரு காவல் பயணம்!.

உங்களைப் போன்ற நேர்மையும், இமையாத துடிப்பும், மக்கள் பணியில் அர்ப்பணிப்பும் கொண்ட பெண் காவல்துறை அதிகாரிகளைப் பற்றி எழுதுவதில் நமது விஜிலென்ஸ் இதழின் பேனா பெரும் பெருமை கொள்கிறது.

தங்களது நேர்மையான பணியும், துணிச்சலான செயல்பாடுகளும் தொடர்ந்து மக்களுக்கு நம்பிக்கையையும், பாதுகாப்பையும் அளிக்கட்டும்.

தொடரட்டும் தங்களது மகத்தான மக்கள் பணி..

சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு





நற்றமிழ் புலவர், வித்தகன், காக்கியின் கம்பன்
வடுகம் டாக்டர் இரா. சிவகுமார் IPS.,DIG.,
காவல்துறை இணை ஆணையர்,
ஆவடி போலீஸ் கமிஷனரேட்,
அம்பத்தூர், சென்னை 53



ஹெல்மெட் அணியுங்கள்..



சீட் பெல்ட் போடுங்கள்..



வேகக் கட்டுப்பாடு

நாளுக்கு நாள்... வாகனங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது; சாலைகளின் அகலம் குறுகி வருகிறது; மனிதர்களின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இறுகி வருகிறது; அதனால் விபத்துக்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

பாதுகாப்பு உங்கள் கையில் -
விதிகளைப் பின்பற்றுங்கள்.

இணை ஆசிரியர் விஜிலென்ஸ் DR.பா.தமிழ் பாரதி ஆனந்தன்



பட்டியலின மக்களுக்காக சட்டத்தைச் சிறப்பாகக் கையாண்டு கர்ஜித்த சிங்கப்பெண் SP ஷானாஸ் IPS..

கள்ளக்குறிச்சியில் வரலாற்று காணாத மாற்றம் ஒன்றை ஏற்படுத்திய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ்..

50 ஆண்டுகால தடையை உடைத்து பட்டியலின மக்கள் கோயிலுக்குள் செல்ல அனுமதித்து எஸ்.பி. ஷானாஸ் அதிரடி நடவடிக்கை!.

"கோவில் என்பது அனைவருக்கும் பொதுவானது. நமக்கு மேல் ஒரு சக்தி உள்ளது அதை நல்ல சக்தியாக நாம் எண்ணி அதை கடவுளாக நினைத்து ஒவ்வொரு மக்களும் அவரவர் மதத்திற்கு ஏற்ப கடவுளை இந்து, கிறிஸ்து, இஸ்லாம் இன்னும் பலவாரியாக பிரித்து வணங்கி வருகிறார்கள். அப்படி இருக்கையில் "கோவிலுக்கு இவர்கள் தான் செல்ல வேண்டும், அவர்கள் தான் செல்ல வேண்டும் என்று தடை விதிக்க முடியாது" சின்னசேலம் அருகே குரால் கிராமத்தில் மாற்று சமூகத்தினர் பூட்டிய பெருமாள் கோயிலை உடைத்து, பட்டியலின மக்களை வழிபட அனுமதித்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ்..

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட குரால் கிராமத்தில், 50 ஆண்டுகளுக்கும் மேலாக பட்டியலின மக்கள் கோயிலுக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையை உடைத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ் தலைமையிலான போலீசார் கோயில் பூட்டை உடைத்து, பட்டியலின மக்களை உள்ளே சென்று வழிபட அனுமதித்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குரால் கிராமத்தில் உள்ள ஸ்ரீ கலியுக சீனிவாச பெருமாள் கோவில், தனிநபருக்குச் சொந்தமான இடத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் கோயில் இந்து சமய அறநிலைத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் கோயிலின் வாசலில் மட்டுமே நின்று சாமி கும்பிட்டு வந்தனர். கோயிலுக்குள் சென்று வழிபட அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அக்டோபர் 3 ஆம் தேதி மூன்றாவது புரட்டாசி சனிக்கிழமையைச் சிறப்பிக்கும் வகையில், பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மேளதாளங்களுடன், தாம்பூல தட்டுகளில் வழிபாட்டுப் பொருட்களுடன் சுவாமி தரிசனம் செய்யச் சென்றனர். இதை அறிந்த அப்பகுதியைச் சேர்ந்த மாற்று சமூகத்தினர், அவர்களிடம் கோயிலுக்குச் செல்ல அனுமதியில்லை என்று கூறி, உடனடியாக அங்கிருந்து செல்லுமாறு வற்புறுத்தினர். இதனால் இரு தரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து, மாற்று சமூகத்தினர் கோயிலின் கதவை மூடி பூட்டு போட்டனர்.

இதையடுத்து, தங்களை கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் மாலை வரை கோயிலின் நுழைவாயில் முன்பு அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷானாஸ் தலைமையிலான காவல்துறை அதிகாரிகள், மாற்று சமூகத்தினரிடம், "கோவில் என்பது அனைவருக்கும் பொதுவானது. அங்கு யாரும் செல்லக்கூடாது என்று தடை விதிக்க முடியாது" என்று எடுத்துரைத்தனர்.

இதையடுத்து, எஸ்.பி. ஷானாஸ் முன்னிலையில், கோயிலின் பூட்டை உடைத்து, பட்டியலின மக்களை உள்ளே செல்ல அனுமதித்தனர். 50க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பட்டியலின மக்கள் மகிழ்ச்சியுடன் கோயில் பிரகாரத்துக்குள் சென்று வழிபாடு மேற்கொண்டனர் என்பது





குறிப்பிடத்தக்கது.

இதே கோயிலில் 2023ல் நடந்த சம்பவம்: கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள எடுத்தவைநாதம் கிராமத்தில் உள்ள 200 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயிலில், 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், 250க்கும் மேற்பட்ட தலித் மக்கள் போலீஸ் பாதுகாப்புடன் முதன்முறையாக உள்ளே சென்று வழிபட்டனர்.

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றி வரும் ஷானாஸ், இதற்கு முன்பும் பல சம்பவங்களில் துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். குறிப்பாக, சங்கராபுரம் காவல் நிலையத்தில் திடீர் ஆய்வு நடத்தியது, மகர சங்கராந்தி பண்டிகைக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் ஆய்வு செய்தது போன்ற நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவை.



இந்த நடவடிக்கைக்கு மாற்று சமூகத்தினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதனால் கிராமத்தில் பரபரப்பான சூழல் நிலவுகிறது. அசம்பாவிதங்களைத் தடுக்கும் வண்ணம் கிராமத்தில் பெருமளவில் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குரால் கிராமத்தில் நடந்த இந்தச் சம்பவம், இந்தியச் சமூகத்தில் இன்னும் ஆழமாக வேரூன்றியுள்ள சாதி அடிப்படையிலான பாகுபாட்டின் ஒரு மோசமான எடுத்துக்காட்டு. 50 ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரு கோயிலுக்குள் செல்ல முடியாத நிலை. இது சட்டப்படி மட்டுமல்ல, மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் ஏற்க முடியாதது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், சமத்துவம் மற்றும் சமூக நீதியை உறுதி செய்கிறது. ஆனால், நடைமுறையில் இத்தகைய பாகுபாடுகள் தொடர்வது, சட்டத்தின் ஆட்சிக்கு ஒரு பெரும் அவமானமே ஆகும்.

எஸ்.பி. ஷானாஸ், "கோவில் என்பது அனைவருக்கும் பொதுவானது" என்று கூறி, பூட்டை உடைத்து பட்டியலின மக்களை வழிபட அனுமதித்தது,





ஒரு துணிச்சலான, நியாயமான நடவடிக்கை. இது, சட்டத்தை நிலைநாட்டுவதுடன், சமூக நீதியையும் மதிக்கிறது. காவல்துறை என்பது சட்டத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல; சமூக அநீதிகளுக்கு எதிராக நிற்பதும் அவர்களின் கடமை. ஷானாஸ் அதைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், இந்த நடவடிக்கை மட்டும் போதாது. சாதி அடிப்படையிலான பாகுபாடுகளை முற்றிலுமாக ஒழிக்க, சமூக மனப்பான்மையில் மாற்றம் தேவை. அரசு, கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மேலும், இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கிராமத்தில் அசம்பாவிதங்களைத் தடுக்க போலீஸ் பாதுகாப்பு தொடர்ந்து நீடிக்கும்.

கோயிலுக்குள் செல்ல தடை விதித்த மாற்று சமூகத்தினர் மீது, SC/ST (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்படலாம்.

இந்தச் சம்பவம், சாதி அடிப்படையிலான பாகுபாடுகள் குறித்து ஒரு பரந்த சமூக விவாதத்தை எழுப்பியுள்ளது. இது, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க உதவலாம்.

இந்த நடவடிக்கை, தமிழ்நாட்டில் உள்ள பிற கோயில்களிலும் பட்டியலின மக்களுக்கு வழிபாட்டு உரிமை கிடைப்பதற்கு ஒரு முன்னுதாரணமாக அமையும்.

பட்டியலின மக்களுக்காக சட்டத்தைச் சிறப்பாகக் கையாண்டு கர்ஜித்த சிங்கப்பெண் ஷிறி ஷானஸ் பணி சிறக்க நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ் விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள்..

தொடரட்டும் உங்களின் அற்புதமான காவல் பணிகள்..



ஜோலார்பேட்டை நிருபர் பரந்தாமன்

இந்தியாவிற்கு பெருமைச் சேர்த்த தடகள வீரர் திருப்பத்தூர் விஷால்..

இந்தியாவிற்கு பெருமைச் சேர்த்த தமிழ்நாட்டின் திருப்பத்தூர் மாவட்டத்தின் ஜோலார்பேட்டையைச் சேர்ந்த தென்னரசு கயல்விழி தம்பதியினரின் 22 வயதான மகன் தடகள வீரர் விஷால் பற்றிய ஒரு சிறப்புத் தொகுப்பு..



தடகள வீரர் விஷால் இளம் வயதில் இருந்தே விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். ஏனென்றால் இவருடைய தந்தை தமிழ்நாடு கால்பந்து அணியில் இடம் பெற்றிருந்த முன்னாள் தமிழ்நாடு கால்பந்து வீரர் தென்னரசு என்பது குறிப்பிடத்தக்கது. விஷால் ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த பயிற்சியாளர் ஜேசன் டாசன் (Jason Dawson) வழிகாட்டுதலில் மற்றும் 'இன்ஸ்பயர் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ்' (IIS) சார்பில் பயிற்சி பெற்று வருகிறார். இவர் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று இந்தியாவிற்காக பதக்கங்களை அள்ளிக் கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணிக்காகப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ளார் என்றால் அது மிகையே அல்ல. இதற்கு முன்பு முகமது அனஸ் யஹ்யா பெயரில் இருந்த தேசிய சாதனையை முறியடித்து புதிய சாதனைப் படைத்துள்ளார் தடகள வீரர் விஷால் என்பது நிதர்சனமான உண்மை.



ஃபெடரேஷன் கோப்பைக்கான 29 வது தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி, ஜார்க்கண்ட் மாநிலம், ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா மைதானத்தில் கடந்த மே 22 ஆம் தேதி கோலாகலமாகத் தொடங்கி நடைபெற்றது. இந்தப் போட்டியில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, பஞ்சாப், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். ஆண்களுக்கான 400 மீட்டர் பிரிவு ஓட்டப்பந்தயத்தில் கலந்துக் கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர் விஷால் 44.98 வினாடிகளில் இலக்கை எட்டி தனது முந்தைய தேசிய சாதனையை அவரே தற்போது முறியடித்து அசத்தியுள்ளார்.

விஷால், 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தை 44.98 விநாடிகளில் கடந்து தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார். இதன் மூலம், 45 விநாடிகளுக்குள் இலக்கைக் கடந்து இந்தச் சாதனையைப் படைத்த முதல் இந்திய வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார். புதிய சகாப்தத்தைப் படைத்ததுடன் ஆசிய அளவில் மிகச்சிறந்த வீரர்களில் ஒருவராகவும் உருவெடுத்துள்ளார். தங்கப்பதக்கம் வென்ற விஷாலுக்கு அப்போதே விளையாட்டு வீரர்கள் உள்பட பல்வேறு தரப்பினரும் சமூக வலைத்தளங்கள் மூலம் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீரர் விஷால் தென்னரசு கயல்விழி தடகள பிரிவில், இரண்டு பதக்கங்களை வென்று, தமிழ்நாட்டிற்குப் பெருமைச் சேர்த்துள்ளார்.





ஜப்பானில் நடைபெற்று வரும் 2026 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டு போட்டியில் கலப்பு 4×400 மீட்டர் தொடர் ஓட்ட பந்தயத்தில் இந்தியா வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. இந்த அணியில் இடம் பெற்றிருந்த வீரர்களில் விஷாலும் ஒருவர். மேலும் ஆடவர் 4வூ400 தொடர் ஓட்டத்தில் வெண்கல பதக்கத்தையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி வாகையுடன் வந்த தடகள வீரர் விஷால் மற்றும் வீரர் வீராங்கனைகளை தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேரில் சந்தித்து பாராட்டுக்களைத் தெரிவித்தார்.



சாதனைப் படைத்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீரர்கள் விஷால், ராஜேஷ் ஆகியோருக்கு தலா ரூ.30 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படும் என முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார். அவரது எக்ஸ் பதிவில், இவர்களது விடாமுயற்சியும், அர்ப்பணிப்பும், குழு ஒருங்கிணைப்பும் வெற்றியை நோக்கி பயணிக்கும் இளைய தலைமுறையினருக்கு நம்பிக்கையையும், உத்வேகத்தையும் அளிக்கும் என குறிப்பிட்டு பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



பின்னர் விஷால் தெரிவித்ததாவது : ஒரு விளையாட்டு வீரரே விளையாட்டுத் துறை அமைச்சராக வந்திருப்பதால், வீரர்களின் குறைகளை உணர்ந்து தேவையான உதவிகளைச் செய்கிறார். மேலும் 'எலைட்' திட்டத்தின் மூலம் மாதந்தோறும் உதவித்தொகையும், உபகரணங்கள் வாங்க உதவியும் கிடைத்தன. அதேபோல், அரசு வேலை வாய்ப்பு வழங்கியதன் மூலம் எவ்வித மன அழுத்தமும் இன்றி விளையாட்டில் கவனம் செலுத்த முடிகிறது" என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் தங்கம் வெல்வேன் என்று எதிர்பார்த்தேன். ஆனால், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் வென்றதும் நாட்டிற்கு கிடைத்த பெருமை என்பதால் மகிழ்ச்சியளிக்கிறது. அடுத்த முறை கண்டிப்பாகத் தங்கம் வெல்வதற்குக் கடுமையாக உழைப்பேன். அடுத்து வரும் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயாராவதே எனது அடுத்த பெரிய இலக்காகும். திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை போன்ற சிறிய நகரங்களில் இருந்து வந்து இன்று இந்த நிலையை அடைந்துள்ளது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. என்னால் முடியும் போது, கிராமப்புறங்களில் இருந்து வரும் மற்ற இளைஞர்களும் நிச்சயமாக சாதிக்க முடியும். அரசு வழங்கும் வாய்ப்புகளையும், ஆதரவையும் பயன்படுத்தி, நாட்டுக்காகப் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு உழைத்தால் அனைவரும் சாதிக்கலாம்" என்று தடகள வீரர் விஷால் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிற்கு பெருமை சேர்த்த தடகள வீரர் திருப்பத்தூர் விஷாலுக்கு நமது விஜிலென்ஸ் அரசியல் மற்றும் புலனாய்வு இதழ், விஜிலென்ஸ் டிவி விஜிலென்ஸ் மக்கள் இயக்கம் மற்றும் விஜிலென்ஸ் கல்வி அறக்கட்டளை சார்பில் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுக்கள்.. தொடரட்டும் விஷாலின் சாதனைப் பட்டியல்கள்..

மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும்
10 முக்கிய வாழ்க்கைப் பாடங்கள்

1

சமூக வலைதளத்தை வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள்

Social Media-வை உங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்துங்கள்; அதற்கு அடிமையாகாதீர்கள். தேவையற்ற பொழுதுபோக்குகளில் பொன்னான நேரத்தை வீணாக்காமல், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் எதிர்கால உயர்விற்கு பயனுள்ள வழியில் பயன்படுத்துங்கள்.



2

மதிப்பெண் மட்டுமே வாழ்க்கை இல்லை

தேர்வில் எதிர்பாராத பின்னடைவு எற்பட்டாலும் வாழ்க்கை முடிந்துவிட்டதாகக் கருதாதீர்கள். ஒவ்வொருவரிடமும் தனித்திறமை உள்ளது. உங்கள் திறமையைக் கண்டறிந்து, தொடர் பயிற்சி மற்றும் முயற்சியால் சாதனை படையுங்கள்.



3

பிரிவினையைத் தவிர்த்து மனிதநேயம் வளருங்கள்

குறுகிய மனப்பான்மை, வெறுப்பு மற்றும் பழிவாங்கும் எண்ணங்களைத் தவிருங்கள். மனிதநேயம், பரஸ்பர அன்பு, நல்லிணக்கம் மற்றும் மரியாதையை வளர்த்துக்கொள்ளுங்கள், கல்வி மற்றும் அறிவாற்றலால் அனைவரும் இணைந்து சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்.



4

கிராமத்தின் அடையாளம் நற்பண்புகளும் வளர்ச்சியுமே

ஒவ்வொரு ஊரின் அடையாளமும் அங்கு உருவாகும் சான்றோர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர், சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் சமூக முன்னேற்றமாக இருக்க வேண்டும். நேர்மறையான சாதனைகள் மூலமே நம் ஊருக்குப் பெருமை சேர்ப்போம்.



5

போதைக்கு "No"; நல்ல பாதைக்கு "Yes"

"ஒருமுறைதானே" என்று தொடங்கும் தவறான பழக்கங்கள் படிப்பு, குடும்ப மகிழ்ச்சி மற்றும் எதிர்காலத்தைப் பாதிக்கதக்கூடும். போதைப் பொருட்களின் ஆபத்தை உணர்ந்து, அவற்றைத் தவிர்த்து ஆரோக்கியமான வாழ்க்கையைத் தேர்ந்தெடுங்கள்.



6

Reels மோகத்தில் காலத்தை வீணாக்காதீர்கள்

தற்காலிகக் கவனத்தைப் பெறுவதற்காக தேவையற்ற செயல்களில் ஈடுபடாதீர்கள். உங்கள் பொன்னான நேரத்தைக் கல்வி, புதிய தொழில்நுட்பக் கற்றல், உடற்பயிற்சி, விளையாட்டு மற்றும் வேலையாய்ப்புச் சார்ந்த ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்துங்கள்.



7

நல்வழிப்படுத்தும் நட்பைத் தேர்ந்தெடுங்கள்

ஒருவரின் சிந்தனையையும் வளர்ச்சியையும் அவர் உடன் இருக்கும் நட்பு தீர்மானிக்கிறது, தவறான பாதைக்கு வழிகாட்டும் தொடர்புகளைத் தவிர்த்து, உங்கள் இலக்கிற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்.



8

உயர்ந்த கனவு காணுங்கள்; உழைப்பால் வெல்லுங்கள்

அரசுப் பணி, தொழில்முனைவு, அறிவியல், விளையாட்டு அல்லது எந்தத் துறையாக இருந்தாலும் தெளிவான இலக்கை நிர்ணயியுங்கள். அன்றாட உழைப்பு, சுய ஒழுக்கம் மற்றும் தொடர் முயற்சிதான் உங்கள் கனவுகளை நனவாக்கும்.



9

இணையவழிக் குற்றங்களில் விழிப்புடன் இருங்கள்

டிஜிட்டல் உலகில் பாதுகாப்பாக இருங்கள். தெரியாத நபர்களின் சந்தேகத்திற்குரிய Links-களை Click செய்யாதீர்கள். இணையவழி நிதி மோசடிகள், போலிச் செய்திகள் மற்றும் தவறான தகவல்கள் குறித்து விழிப்புணர்வுடன் செயல்படுங்கள்.



Think before you Click.
Think before you Share.

10

உங்களையும், குடும்பத்தையும், ஊரையும் உயர்த்துங்கள்

உங்கள் முன்னேற்றம் உங்களோடு முடிந்துவிடக் கூடாது. சிறந்த கல்வியால் உங்கள் வாழ்க்கையை உயர்த்துங்கள்; பெற்றோருக்குப் பெருமை சேருங்கள்; நீங்கள் வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் உங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குங்கள்.





குரோதத்தை விட்டுவிட்டு அறிவைத் தேர்ந்தெடுங்கள்.
குற்றப் பாதையைத் தவிர்த்து வளர்ச்சியைத் தேர்ந்தெடுங்கள்.
நேரத்தை வீணாக்காமல் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குங்கள்!

"அறிவான் தவிர்; அறிவால் உயர் — உன் வாழ்க்கையின் நாயகன் நீயே!"

NAMATHU VIJILENCE Owned and Published by Vijilence DR.D.ANANDHAN, 78/25, Ferry Ghat Road, Musiri - 621 211, Trichirappalli District. Printed at CHENNAI OFFSET PRINTERS, 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Founder/Publisher/Editor : Vijilence DR.D.ANANDHAN. Cell : 89734 15000.

All Rights Reserved Legal Jurisdiction in Trichy City Court Only. Nothing in Namathu Vijilence is intended to defame any person. But expressed in Good Faith, Pursuit of Truth and Public Good.